PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE

ALL ONLINE SERVICES

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்

8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 8 பக்கங்கள் சென்னை, 11 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 122

என் முதல் குழந்தையை இழந்தேன்... உடலை ஆற்றில் வீச மறுத்தேன்: சோனியா

சென்னை – 11 நவம்பர், 2026 ராகுல் காந்திக்கு முன்பே ஒரு குழந்தை பிறந்து இறந்துவிட்டதாகவும், அந்தக் குழந்தையை ஆற்றில் வீசச் சொன்னபோது தான் மறுத்துவிட்டதாகவும் சோனியா காந்தி தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

'பிலாங்கிங்: ஏ ஜர்னி ஆஃப் லவ்' என்ற புத்தகத்தில் சோனியா எழுதியிருக்கும் பல முக்கிய தகவல்கள் தற்போது வெளியாகி வருகிறது.

அதில்தான் இதுவரை அவர் பகிர்ந்திராக ஒரு தகவலை பகிர்ந்துள்ளார்.

1968ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காந்தியின் வீடு முழுக்க மகிழ்ச்சியால் திளைத்திருந்தது.

காரணம், சோனியா தான் கருவுற்றிருப்பதை அறிவித்தபோது, ஒட்டுமொத்த குடும்பமும் மகிழ்ச்சி அடைந்தது.

எப்போதும் உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இருக்கும் இந்திராவே, சோனியாவை கட்டியணைத்து ஒரு பெரிய குழந்தைக்கு சிறிய குழந்தை பிறக்கப்போகிறது என்று கூறி மகிழ்ந்தார்.

ஆனால், இந்த மகிழ்ச்சி வெகுநாள்கள் நீடிக்கவில்லை.

1969ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் தேதி சோனியாவுக்கு குறைப்பிரசவத்தில் குழந்தை பிறந்து இறந்துவிட்டது.

ஒட்டுமொத்த குடும்பமும் கலங்கிப்போனது.

புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதாவது, குழந்தையின் அழுகுரலைக் கேட்டேன்.

இன்குபேட்டரில் வைக்கப்பட்டிருந்த குழந்தையை நானும் ராஜீவ்வும் சென்று பார்த்தோம், அப்போதே, குழந்தை உயிர்பிழைக்கும் வாய்ப்பு குறைவு என்று மருத்துவர்கள் கூறினர், அதுபோலவே, காலை 6 மணிக்கெல்லாம் குழந்தை இறந்துவிட்டதாகக் கூறினார்கள்.

உடைந்துவிட்டோம், கதறி அழுதோம்.

ஹிந்து முறைப்படி பிறந்த குழந்தைக்கு இறுதிச் சடங்குகள் செய்யக்கூடாது, ஆற்றில் விடவேண்டும் என்று சொன்னார்கள்.

ஆனால், ஆற்றில் வீச நான் மறுத்துவிட்டேன்..

மெஹ்ரௌலியில் ஃபேரோஸ்காந்தியின் பண்ணை வீட்டில் குழந்தை புதைக்கப்பட்டது என்று புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சோனியா காந்தி, 'பிலாங்கிங்: ஏ ஜர்னி ஆஃப் லவ்' என்ற புத்தகத்தில் தன்னுடைய வாழ்வின் பல முக்கிய தருணங்களை பகிர்ந்து கொண்டுள்ளார். அதில்தான் இந்த தகவலும் வெளியாகியிருக்கிறது.



அதிகரிக்கும் துப்பாக்கி கலாசாரம்! அச்சத்தின் பிடியில் தமிழக மக்கள்! - இபிஎஸ் விமர்சனம்

சென்னை – 11 நவம்பர், 2026 வட மாநிலங்களைப்போல தமிழகத்தில் துப்பாக்கி கலாசாரம் பரவி வருவது தமிழக மக்களை அச்சத்தின் பிடியில் தள்ளியுள்ளதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகி ஞானவேல் என்பவர் நாட்டுத் துப்பாக்கியால் கொடூரமாக சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ள செய்தி மிகவும் அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீரழிந்து, சாமானிய மக்களுக்கு பாதுகாப்பில்லாத ஒரு சூழல் நிலவி வரும்நிலையில், தற்போது வட மாநிலங்களை போல துப்பாக்கி கலாசாரமும் பரவி வருவது தமிழக மக்களை அச்சத்தின் பிடியில் தள்ளியுள்ளது.

குற்றங்கள் நடக்கும் போதெல்லாம், "உயர்மட்ட ஆலோசனை நடத்துகிறோம்", "கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளோம்" என்று வெறும் பெயரளவு செய்திகளை மட்டும் ஊடகங்களில் பரப்புவதால் யாருக்கு என்ன லாபம்?

வெறும் விளம்பர அறிக்கைகளாலும், கேமராக்களுக்கு முன்னால் நடத்தும் போலி ஆய்வுகளாலும் ஒரு மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கை ஒருபோதும் சரிசெய்து விட முடியாது. இது தொடர்பாக தனது எக்ஸ் தளப் பக்கத்தில் எடப்பாடி பழனிசாமி பதிவிட்டுள்ளதாவது:

காவல்துறையை தன் கையில் வைத்துள்ள பொய்க்கால் குதிரை அரசின் முதலமைச்சர் நிர்வாகத் திறமையின்றி தூங்கிக் கொண்டிருக்கிறாரா?

எனவே, இனிமேலும் விளம்பர பாணியில் வெற்று நாடகங்களை நடத்தாமல், தமிழ்நாட்டில் சீரழிந்து கிடக்கும் சட்டம் - ஒழுங்கை உடனடியாக சரிசெய்யவும், துப்பாக்கி கலாசாரத்தை ஆரம்ப நிலையிலேயே இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும் தேவையான தக்க நடவடிக்கைகளை பொய்க்கால் குதிரை அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.



கடந்த ஐந்து ஆண்டுகளில் எய்ம்ஸ் மருத்துவமனைகளில் ஆறு கோடிக்கும் அதிகமான புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்

சென்னை – 11 நவம்பர், 2026 பிரதமரின் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்கள் (எய்ம்ஸ்) 2021-2022 முதல் 2026-2027- ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் 2026 அக்டோபர் 31 நிலவரப்படி மொத்தம் ஆறு கோடிக்கும் அதிகமான புறநோயாளிப் பிரிவு ஆலோசனைகளை வழங்கியுள்ளன. இச்சாதனை இந்நிறுவனங்களில் வளர்ந்து வரும் செயல்திறனையும் நாடு முழுவதுமுள்ள மக்களுக்கு சிறப்புமிக்க சுகாதார சேவைகள் எளிதில் சென்றடையச் செய்வதில் ஆற்றிய பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.

குறைந்த கட்டணத்தில் நம்பகமான சிறப்பு சுகாதார சேவைகள் கிடைப்பதில் பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை குறைக்க எய்ம்ஸ் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இம்முயற்சி சிறப்பு சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதுடன் நாட்டின் மருத்துவ கல்வி, ஆராய்ச்சி சூழலை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

பிரதமரின் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு கட்டங்களாக அங்கீகரிக்கப்பட்ட 22 புதிய எய்ம்ஸ் நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் முழுமையாக செயல்படுகின்றன. இந்நிறுவனங்கள் புறநோயாளிப் பிரிவு, உள்நோயாளிப் பிரிவு பராமரிப்பு, அவசர சிகிச்சை, விபத்து சிகிச்சைகள், நோய் கண்டறிதல், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு சேவைகளை அளிக்கின்றன.

இந்நிறுவனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை ஆண்டு வாரியாக வெளியிடப்பட்டுள்ள புறநோயாளிப் பிரிவு புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

2026-2027- ம் நிதியாண்டில் அக்டோபர் வரை இந்த புதிய எய்ம்ஸ் நிறுவனங்களில் 97.41 லட்சம் புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நிதி நெருக்கடிகளிலிருந்து உலகளாவிய கல்வி வாய்ப்புகள்

சென்னை – 11 நவம்பர், 2026 மகாராஷ்டிராவின் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த இளம் மாணவரான ராஜேஷ் ஷெட்ஜ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது), கல்வியில் மிகுந்த ஈடுபாட்டையும், சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனமொன்றில் உயர்கல்வி பயில வேண்டும் என்ற விருப்பத்தையும் கொண்டிருந்தார். எனினும், நிதி நெருக்கடியால், வெளிநாட்டில் கல்வி கற்பது, ஒரு பெரும் சவாலாக அமைந்தது.

2025–26 நிதியாண்டில், மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் தேசிய வெளிநாட்டு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், கல்விக் கட்டணமாக 39,800 பவுண்ட், பராமரிப்புச் செலவுக்கு 9,900 பவுண்ட் உடன், விமானக் கட்டணம், விசா கட்டணம், காப்பீடு, இதர கல்விச் செலவுகளுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது. இந்த உதவி, அவரது குடும்பத்தின் நிதிச் சுமையைக் கணிசமாகக் குறைத்ததுடன், தரமான சர்வதேசக் கல்வியைப் பெறுவதற்கு அவருக்கு வழிவகை செய்தது.

இந்தத் திட்டத்தின் ஆதரவுடன், ஷெட்ஜ், தற்போது இங்கிலாந்தில் உள்ள லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் கட்டுமானப் பொருளாதாரம் மற்றும் மேலாண்மையில் முதுகலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார். அவர் விரிவுரைகள், பயிற்சிகள், இதர கல்விசார் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்று, சர்வதேசக் கல்வித் தரநிலைகள், மேம்பட்ட ஞானம், கட்டுமான மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளில் உள்ள தொழில்முறை நடைமுறைகள் குறித்த அனுபவத்தைப் பெறுகிறார்.

உயிரி தொழில்நுட்பத் துறையில் தொழில்துறை பங்கேற்பு அவசியம்: டாக்டர் ஜிதேந்திர சிங்

சென்னை – 11 நவம்பர், 2026 இந்தியா அடுத்த உயிரி தொழில்நுட்பம் சார்ந்த தொழில் புரட்சிக்கு தயாராக உள்ளதாக மத்திய அறிவியல், தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

தேசிய நோய் எதிர்ப்பியல் நிறுவனத்தில் நடைபெற்ற உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கண்டுபிடிப்பு குழுமத்தின் மூன்றாவது நிறுவன ஆண்டு தினத்தையொட்டி உரையாற்றிய அவர், அறிவியல் நிறுவனங்களுக்கிடையே வலுவான ஒருங்கிணைப்பு தேவையென்றும் இந்தியாவின் உயிரி தொழில்நுட்ப சூழலில் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அறிவியல் நிறுவனங்களுக்கிடையான தனித்துவ செயல்பாட்டு முறைகளை களைந்து ஒருங்கிணைப்பை ஏற்படுத்த அரசு ஊக்கமளித்து வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார். உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கண்டுபிடிப்பு குழுமம் ஒரு கூட்டுக் குடும்பம் என்று குறிப்பிட்ட அவர், அதிலுள்ள நிறுவனங்கள் தங்களுடைய தனித்தன்மையையும், சுதந்திரத்தையும், தன்னாட்சியையும் கொண்டு வளங்களை பகிர்ந்து கொள்வதாக தெரிவித்தார். இது பல்வேறு இயக்குநரகங்கள், அனுமதிகள் குறித்த நடைமுறை சிக்கல்களை குறைப்பதோடு அறிவியல் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளையும் உருவாக்குவதாக அவர் கூறினார். மற்ற துறைகளும், அமைச்சகங்களும் இந்த மாதிரியை பின்பற்றியுள்ளதாக அவர் கூறினார்.

இத்துறையின் வளர்ச்சி குறித்து குறிப்பிட்ட டாக்டர் ஜிதேந்திர சிங், தற்போதைய அரசு பொறுப்பேற்றபோது பத்து பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்தியப் பொருளாதாரம் தற்போது 195 பில்லியன் அமெரிக்க டாலருக்கு மேலாக வளர்ச்சியடைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

ஒடிசாவில் சிறுதானிய சாகுபடியை அதிகரிக்க சிறப்புத் திட்டங்கள்

சென்னை – 11 நவம்பர், 2026 ஒடிசாவில் சிறுதானிய சாகுபடியை அதிகரிக்க சிறப்புத் திட்டங்கள்: ஐசிஏஆர் தலைமை இயக்குநர் எம்.எல். ஜாட்.

ஒடிசா மாநிலம், சிறுதானியங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாய வளர்ச்சிக்கான தேசியத் திட்டத்தை உருவாக்கி வருகிறது.

பயிர் பல்லுயிர் பாதுகாப்பு, பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் விவசாயம், நிலையான உணவு முறைகள் ஆகியவை குறித்த இரண்டு நாள் தேசிய மாநாடு இன்று (2026 நவம்பர் 10) புவனேஸ்வரில் தொடங்கியது.

இதில் பேசிய இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழும (ஐசிஏஆர் - ICAR) தலைமை இயக்குநர் டாக்டர் எம்.எல். ஜாட், ஒடிசாவில் சிறுதானிய சாகுபடிப் பரப்பை தற்போதைய 1.79 லட்சம் ஹெக்டேரில் இருந்து 2047- க்குள் 5 லட்சம் ஹெக்டேராகவும், உற்பத்தியை 8 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஒடிசாவின் சிறுதானிய திட்டத்தை தேசிய முன்மாதிரியாகக் குறிப்பிட்ட அவர், 2024-25- ல் 7.5 லட்சம் குவிண்டால் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டதையும், 2025-26- ல் 8 லட்சம் குவிண்டால் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதையும் பாராட்டினார்.

மேலும், பாரம்பரிய ரகங்களைப் பாதுகாத்தல், சாகுபடி நுட்பங்களை மேம்படுத்துதல், சிறுதானியப் பதப்படுத்தும் இயந்திரங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகள், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள அவர் வலியுறுத்தினார்.

மாலத்தீவில் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 3 மீனவர்கள் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜனை, நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.



மாலத்தீவில் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தைச் சேர்ந்த திரு.அந்தோணி ராஜ், திரு.மிக்கேல் சாம், திரு.அமல்ராஜ் ஆகிய 3 மீனவர்கள் மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.11.2026) தருவைக்குளம் பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தூத்துக்குடி – 11 நவம்பர், 2026

மாலத்தீவில் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தைச் சேர்ந்த.அந்தோணி ராஜ்,.மிக்கேல் சாம்,.அமல்ராஜ் ஆகிய 3 மீனவர்கள் மாவட்ட ஆட்சியர்.விஷ்ணு மகாஜன் அவர்கள் இன்று (10.11.2026) தருவைக்குளம் பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த மூன்று ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், கடந்த 13.10.2026 அன்று மாலத்தீவு கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர்.

மத்திய மற்றும் மாநில அரசின் தொடர் முயற்சிகளின் அடிப்படையிலும், மாலத்தீவில் உள்ள இந்திய உயர் ஆணையம் ஆகியவற்றின் வாயிலாக சிறைபிடிக்கப்பட்ட 24 மீனவர்களை விடுவித்து, 08.11.2026 அன்று பத்திரமாக தாயகம் திரும்பியுள்ளார்கள். அதில் தருவைகுளத்தைச் சேர்ந்த.அந்தோணி ராஜ்,.மிக்கேல் சாம்,.அமல்ராஜ் ஆகிய 3 மீனவர்கள் மாவட்ட ஆட்சியர்.விஷ்ணு மகாஜன் அவர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் உதவி ஆட்சியர் (பயிற்சி).பாட்டீல் கிருஷ்ணா பபுருவான் ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர்.ஐய்யனார் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் பிரச்சனைகளை குணப்படுத்த அமெரிக்காவின் ‘ரெசூம்’ நீராவி சிகிச்சை: காவேரி மருத்துவமனை அறிமுகம்

சென்னை – 11 நவம்பர், 2026

சென்னை,10 2026: கேன்சர் அல்லாத புரோஸ்டேட் சுரப்பி வீக்கங்களை அறுவை சிகிச்சை இல்லாமல் குணப்படுத்த ‘ரெசூம் நீராவி சிகிச்சை’ என்ற குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சையை ரேடியல் ரோடு காவேரி மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது.

கேன்சர் அல்லாத புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்தால் அடிக்கடி சிறுநீர் கழித்தல், முழுமையாக சிறுநீர் கழிக்க முடியாத நிலை அல்லது சிறுநீர் தேங்குதல் போன்ற சிக்கல்கள் ஏற்படலாம். பொதுவாக வீக்கமடைந்த புரோஸ்டேட் திசுக்களை குணப்படுத்த அறுவை சிகிச்சை அல்லது லேசர் முறை மூலம் திசுக்கள் அகற்றப்படும். ஆனால் அமெரிக்காவில் உருவான ரெசூம் சிகிச்சை முறையில் நீராவியில் உள்ள வெப்பத்தின் மூலம் வீக்கமடைந்த திசுக்களை குணப்படுத்த முடியும்.

தற்போது இந்தச் சிகிச்சை ரேடியல் ரோடு காவேரி மருத்துவமனையில், அதன் சிறுநீரக-புற்றுநோயியல் துறை தலைமை மருத்துவர் டாக்டர் சிவராஜ் பரத்குமார் அவர்களால் வழங்கப்படுகிறது.

இச்சிகிச்சை முறை குறித்து விளக்கிய டாக்டர் சிவராஜ் பரத்குமார், “ரெசூம் என்பது கேன்சர் இல்லா புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்திற்கான ஒரு குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சை முறையாகும். அறுவை சிகிச்சை மூலம் புரோஸ்டேட் திசுக்களை அகற்றுவதற்குப் பதிலாக, ஒரு சிறிய எண்டோஸ்கோபி கருவியைப் பயன்படுத்தி, புரோஸ்டேட் சுரப்பியில் ஒரு மெல்லிய ஊசியின் மூலம் சூடாக்கப்பட்டு கிருமி நீக்கப்பட்ட சுத்தமான நீராவியை வீக்கமடைந்த திசுவிற்குள் நேரடியாகச் செலுத்துகிறோம். இது வெப்ப சிதைவை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, சிகிச்சை அளிக்கப்பட்ட திசு படிப்படியாக உடைந்து நோயாளியின் உடலாலேயே உறிஞ்சப்படுகிறது. பாரம்பரிய அறுவை சிகிச்சை முறைகளுடன் ஒப்பிடும்போது, இந்த சிகிச்சையில் மிகக் குறைந்த இரத்த இழப்பே ஏற்படும். சிகிச்சையின் நேரமும் வெகுவாக குறைகிறது,” என்றார்.

வழக்கமான புரோஸ்டேட் அறுவை சிகிச்சைகளுக்கு சுமார் 60-90 நிமிடங்களும், லேசர் சிகிச்சைகளுக்கு 2-3 மணிநேரமும் தேவைப்படும் நிலையில், ரெசூம் நீராவி சிகிச்சையை வெறும் 3-5 நிமிடங்களுக்குள் செய்து விட முடியும். மேலும், இதில் உடலுக்குள் எந்த சாதனமும் பொருத்த தேவையில்லை.

வழக்கமான அறுவை சிகிச்சைகளுக்கு 22-24 பிரெஞ்ச் சுற்றளவுள்ள பெரிய சிறுநீர் கேத்தீட்டர் தேவைப்படலாம் என்ற நிலையில், ரெசூம் சிகிச்சைக்குப் பிறகு 14 பிரெஞ்ச் அளவுள்ள சிறிய வடகுழாயே போதுமானது. சிறுநீர்வழியை அதிகமாக விரிவாக்கம் செய்யும் தேவையுமில்லை. எனவே, அறுவை சிகிச்சைக்குப் பின்பு ஏற்படும் அசௌகரியம் குறைவாக இருக்கும். ரெசூம் சிகிச்சையின் மற்றொரு முக்கியமான நன்மை, உட்சுருங்கு தசை பாதுகாக்கப்படுவதாகும். இதனால் விந்து பின்னோக்கி பாயும் ஆபத்து குறைவு. குறிப்பாக, இது குழந்தை பேறு வேண்டும் இளம் நோயாளிகளுக்கு அவசியமாகிறது.

சமீபத்தில் காவேரி மருத்துவமனையில் இந்த சிகிச்சை பெற்ற நோயாளிகளுள் ஒருவருக்கு 80 வயது. அவருக்கு நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய தமனி நோய் இருந்தது. கடந்த ஓராண்டாகச் சிறுநீர் கழிப்பதில் சிரமத்தை சந்தித்து வந்தார். நிலைமை படிப்படியாக மோசமடைந்து, தீவிர சிறுநீர் அடைப்பு ஏற்பட்டதால், நோயாளிக்கு மற்றொரு மருத்துவமனையில் சிறுநீர் வடகுழாய் செலுத்தப்பட்டது. அவரது வயது, உடல் பலவீனம் மற்றும் பிற நோய்களைக் கருத்தில் கொண்டு, வழக்கமான அறுவை சிகிச்சைகளை அவருக்கு செய்ய முடியாத நிலை இருந்தது.

இருப்பினும், ரேடியல் ரோடு காவேரி மருத்துவமனையில் முதியவருக்கு ரெசூம் நீராவி சிகிச்சை வழங்கப்பட்டது. சிகிச்சைக்குப் பின் முப்பத்தியாறு மணிநேரத்திற்குள்ளேயே அவர் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பத்தாவது நாளில் அவரது சிறுநீர் வடகுழாய் அகற்றப்பட்டது. அதன் பிறகு, வடகுழாய் உதவியின்றி இவரால் இயல்பாகச் சிறுநீர் கழிக்க முடிந்தது. மேலும், தொடர் மருத்துவ பரிசோதனைகளின் போதும் அவர் நலமுடன் இருக்கிறார்.

காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ், பேசுகையில், “வயது மற்றும் பிற உடல்நலப் பிரச்சனைகள் காரணமாக, புரோஸ்டேட் சுரப்பி வீக்கம் உள்ள சில நோயாளிகளுக்கு வழக்கமான அறுவை சிகிச்சை முறைகளை செய்ய முடியாத நிலை ஏற்படலாம். இவர்களுக்கு, ரெசூம் நீராவி சிகிச்சை என்னும் குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சை நல்ல மாற்றாக அமையலாம். இதில் குறைந்தளவு இரத்த இழப்பு, குறுகிய சிகிச்சை நேரம் மற்றும் விரைவான ஆரோக்கியம் ஆகிய நன்மைகள் உள்ளன. இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு இன்னும் ஒரு கூடுதலான சிறுநீரக சிகிச்சை சேவையை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சித்துள்ளோம்,” என்றார்.

அசாமில் வனவிலங்கு கடத்தல் முயற்சி முறியடிப்பு: 3 கிலோ எடையுள்ள யானைத் தந்தங்கள் பறிமுதல்

சென்னை – 11 நவம்பர், 2026

அசாமின் குவஹாத்தி அருகே உள்ள சோனாப்பூர் சுங்கச் சாவடிக்கு அருகில் யானைத் தந்தங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில், வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் 2026 நவம்பர் 5 அன்று வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த ஐந்து நபர்களை அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் விசாரித்தபோது, அவர்கள் ஆயுதங்களைக் காட்டி அதிகாரிகளை மிரட்டிவிட்டுத் தப்பியோட முயன்றனர்.

அவர்கள் விட்டுச் சென்ற பையைச் சோதனையிட்ட அதிகாரிகள், அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3.7 கிலோ எடையுள்ள இரண்டு யானைத் தந்தங்களைக் கைப்பற்றினர். வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட இந்தத் தந்தங்கள், மேல்விசாரணைக்காக அசாம் மாநில வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. வனவிலங்குகள் தொடர்பான பொருட்களைக் கடத்தும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று வருவாய் புலனாய்வு இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

MY ARK CENTRE
for Intellectual Disability
HOPES Trust
மாற்றம் என்பது சொல் அல்ல செயல்
அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி
ரெட்டணை ரோடு,
ரயில்வே கேட் அருகில்,
தென்பசியார், திண்டிவனம்-604302
9790439935

'மரகத நாணயம்2' திரைப்படத்தின் தீபாவளி ட்ரீட்

சென்னை – 11 நவம்பர், 2026

பேஷன் ஸ்டுடியோஸ், ஆக்ஸெஸ் பிலிம் பேக்டரி, டங்கல் டிவி & RDC மீடியா வழங்கும் 'மரகத நாணயம்2' திரைப்படத்தின் முதல் பார்வை ரசிகர்களுக்கு தீபாவளி ட்ரீட்டாக வெளியாகியுள்ளது!

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, ‘மரகத நாணயம் 2’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். முதல் பாகம் வெளியாகி ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலான நிலையில், அதன் இரண்டாம் பாகம் குறித்த அறிவிப்பு ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியான ‘மரகத நாணயம்’ திரைப்படத்தின் மூலம் ARK சரவன் இயக்குநராக அறிமுகமானார். தற்போது, வெளியீட்டிற்கு தயாராகி வரும் இதன் இரண்டாம் பாகத்தையும் இவரே எழுதி இயக்கியுள்ளார்.

சாபமிடப்பட்ட மரகதக் கல், குறும்புத்தனமான ஆவிகள், நகைச்சுவை கலந்த சாகசப் பயணம் என இந்தத் திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவர்ந்தது. இப்படத்திற்கென தனி ரசிகர் பட்டாளமும் உருவானது.

படத்தின் இயக்குநர் ARK சரவன் பகிர்ந்து கொண்டதாவது, “’மரகத நாணயம் 2’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கில் முதல் பாகத்தில் நடித்த அனைத்து நடிகர்களும் கிட்டத்தட்ட மீண்டும் இடம்பெற்றுள்ளனர். ஆதி, பிரியா பவானி சங்கர், நிக்கி கல்ராணி, டேனியல் ஆனே போப், முனிஷ்காந்த், அருண்ராஜா காமராஜ், ஆனந்தராஜ் மற்றும் முருகானந்தம் சார் எனப் பலரும் இப்படத்தில் இணைந்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கதையில் எப்படி கனெக்ட் ஆகிறார்கள், எந்த இடத்தில் அனைவரும் ஒன்றிணைகிறார்கள் என்பது ரசிகர்களுக்கு படம் பார்க்கும்போது சர்ப்ரைஸாக இருக்கும். முதல் பாகத்தில் ரசிகர்கள் ரசித்த அதே நகைச்சுவை, சாகசம், ஆக்ஷன் என அனைத்தும் இரண்டாம் பாகத்திலும் அப்படியே இருக்கும். மேலும் பல சுவாரஸ்யமான விஷயங்களும் உள்ளது.

டிரெய்லரில் படத்தின் சிறிய முன்னோட்டம் வெளியாகும். அதன் பிறகு, படம் பார்க்கும்போது இன்னும் பல ஆச்சரியங்கள் ரசிகர்களுக்காகக் காத்திருக்கின்றன. முதல் பாகத்தில் நிக்கியின் கதாபாத்திரம் மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது. அதேபோல், இந்தப் பாகத்திலும் அவருடைய கதாபாத்திரம் வலுவானதாகவும் ஸ்பெஷலாகவும் இருக்கும். படம் வெளியாகும்போது அதை ரசிகர்கள் தெரிந்துகொள்வார்கள்” என்றார்.



‘மரகத நாணயம் 2’ திரைப்படத்தை சுதன் சுந்தரம், தேவ், கே.வி. துரை, மனிஷ் சிங்கள் மற்றும் துர்கம் சௌத்ரி ஆகியோர் பேஷன் ஸ்டுடியோஸ், ஆக்ஸெஸ் பிலிம் பேக்டரி, டங்கல் டிவி மற்றும் RDC மீடியா ஆகிய நிறுவனங்களின் சார்பில் தயாரித்துள்ளனர்.

நடிகர்கள்: ஆதி மற்றும் பிரியா பவானி சங்கர் முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். சத்யராஜ், நிக்கி கல்ராணி, முனிஷ்காந்த், ஆனந்தராஜ், டேனியல் ஆனி போப், அருண்ராஜா காமராஜ் மற்றும் முருகானந்தம் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தொழில்நுட்பக்குழு விவரம்:

எழுத்து, இயக்கம்: ARK சரவன்.

தயாரிப்பாளர்கள்: சுதன் சுந்தரம், தேவ், கே.வி. துரை, மனிஷ் சிங்கள், துர்கம் சௌத்ரி,

தயாரிப்பு நிறுவனங்கள்: பேஷன் ஸ்டுடியோஸ், ஆக்ஸெஸ் பிலிம் பேக்டரி, டங்கல் டிவி மற்றும் RDC மீடியா,

இசை: திபு நினன் தாமஸ்,

ஒளிப்பதிவு: தீபக் டி. மேனன், பி.வி. சங்கர்,

கலை இயக்கம்: என்.கே. ராகுல்,

படத்தொகுப்பு: திருமலை ராஜன் ஆர்,

வசனம்: ராஜேஷ் கண்ணன்,

சண்டைப் பயிற்சி: பிசி ஸ்டன்ட்ஸ்,

நடன அமைப்பு: ரகு தாபா,

ஆடை வடிவமைப்பு: ஏ. கீர்த்திவாசன்

தயாரிப்பு நிர்வாகி: எஸ்.எஸ். ஸ்ரீதர்,

செயல் தயாரிப்பாளர்: பி. மோகன்

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

தவெக ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு 6 மாத தவெக ஆட்சி – குரங்கு கையில் பூமாலை

சென்னை – 11 நவம்பர், 2026 தவெக ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு 6 மாத தவெக ஆட்சி – குரங்கு கையில் பூமாலை ஒரே நாளில் 17 கொலைகள்- பண்டிகை நாளில் கூட பாதுகாப்பில்லை கலெக்டருக்கே ஆபாச மெசேஜ் அனுப்பும் TVK MLA. - இ. பரந்தாமன்

நாட்டு மக்கள் எல்லாம் மறந்திருக்க மாட்டீங்க. இருந்தாலும் கூட உங்களை நினைவூட்டுறதுக்காகதான் இதை நாங்க பிளே பண்ணோம். (விஜய் மற்றும் ஆதவ் அர்ஜூன பேசிய வீடியோ முன்னதாக Play செய்யபட்டது). பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சட்டமன்றத்தில் பேசின பேச்சு, எழுதி வைத்துக்கொள்ளுங்கள்: "ஆறு மாசத்துல சட்டம் ஒழுங்கை நாங்க எப்படி தூக்கி நிப்பாட்டிடுவோம்னு, இந்த ஆறு மாசம் தவெக-வினுடைய ஆட்சி, நேற்றைக்கு நடந்த தீபாவளி பண்டிகைதான் ஒரு பெரிய சாட்சி."

இப்ப கூட நான் வந்து உங்களை சந்திக்கிறதுக்கு வரும்போதுகூட தொலைக்காட்சியில பார்த்தேன். தலை தீபாவளியை கொண்டாடிட்டு முதலமைச்சர் விஜய் இப்பதான் வந்து சீப் செக்ரட்டரியையும் டிஜிபி கிட்டயும் ஒரு ரிவ்யூ பண்ணிட்டு இருக்கிறார். இந்த ஆட்சியின் முதல் தீபாவளி, அதனால தலை தீபாவளின்னு சொன்னேன்; உடனே விர்ச்சுவல் வாரியர்ஸ் கிளம்பி வந்துராதீங்க. எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன மாதிரி, இந்த பண்டிகை நாள்ல பட்டாசு சத்தத்தை விட பட்டாகத்தி சத்தம்தான் அதிகமா கேட்டுருக்கு.

தமிழ்நாட்டில பண்டிகை தினத்தன்று மட்டும் 17 கொலைகள் நடந்திருக்கு. இத பற்றி கேட்டா.. சட்டவிரோத சம்பவங்கள் பண்டிகை காலங்கள்னா அப்படி இப்படி இருக்கத்தான் செய்யும்னு —யார் சொல்றாரு? நம்ம ஸ்டாண்ட்அப் காமெடியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜமோகன் அவர்கள் சொல்றார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜமோகன் அவர்களே, தீபாவளி பண்டிகை அன்னைக்கு நீங்க பேசுற சிறப்பு பட்டிமன்றத்துல உங்க இஷ்டத்துக்கு பேசுறதுக்கு இப்ப நீங்க அமைச்சர் ஆட்சியில் இருக்கீங்க. பண்டிகை நாட்கள்லதான், காவல்துறை ரொம்ப அதிகமா விழிப்போடு இருக்கணும். ஆனா இந்த பண்டிகை நாட்கள்ல வியாபாரம் குறைஞ்சிருக்குது, வரலாறு காணாத அளவுக்கு கொலைகள் அதிகரிச்சிருக்குது.

கிரிக்கெட் ஸ்கோர் ஏறும். 6, 8, 9 ரன், 10 ரன் அப்படி எகிறும். அந்த மாதிரி பண்டிகை காலமான நேற்று மட்டும் 9, 10, 13, என நைட் 17 வரைக்கும் போய் எகிறுது. கிரிக்கெட் ஸ்கோர் மாதிரி, இன்னைக்கு கொலைகளுடைய எண்ணிக்கை அதிகமா இருக்கு.

ஹாலிவுட் படத்துல 'தி பர்ஜ்' (The Purge) அப்படின்னு ஒரு படம் இருக்கு. அந்த படத்துல ஒரு நாள் லீவு விட்டுருவாங்க. சட்டம் ஒழுங்க பத்தி கவலைப்பட மாட்டாங்க. போலீஸ் கண்டுகாது, அரசாங்கம் கண்டுக்காது; யார் வேணா எந்த குற்றச் சம்பவத்துலயும் ஈடுபடலாம், அது யாருமே கேட்க முடியாது. அப்படித்தான் முதலமைச்சர் விஜய் அவர்களே, தீபாவளி பண்டிகை அன்னைக்கு ஒரு நாள் நீங்க Sleep Mode போயிட்டு எந்த அதிகாரியுமே வந்து முதலமைச்சரைத் தொடர்பு கொள்ள முடியலையா.? அந்த ஸ்லீப் மோட்ல போயிட்டு, இந்த போர்ஜ் ஹாலிவுட் திரைப்படம் மாதிரி, இன்னைக்கு தமிழ்நாட்டுல 17 சம்பவங்கள் நடந்திருக்கு.

இது டைம்ஸ் ஆப் இந்தியாவுடைய இன்றைய பத்திரிக்கை. இத பிரிண்ட்ல ஏத்தும்போது '13 மர்டர்ஸ் இன் எ சேம் டே, ஒன் ஆன் எ சிங்கிள் டே'. ஆனா இன்னைக்கு 17 பேர் கொலை செய்யபட்டுள்ள செய்தி வந்திருக்கு, இப்போ வரைக்கும். CM சார், பேப்பர் படிக்கிறீங்களா சார்? மூணு நாளா பேப்பர் படிச்சீங்களா சார்? எங்க சார் இருந்தீங்க மூணு நாளா? உங்க சீப் செக்ரட்டரி உங்களைத் தொடர்பு கொள்ள முடியலன்னு தகவல் வருது எங்களுக்கு. உங்க டிஜிபி உங்களைத் தொடர்பு கொள்ள முடியலன்னு தகவல் சார்.

காலையில 10 மணிக்கு வந்து, சாயங்காலம் 5 மணிக்கு போகுற ஸ்கூல் சில்ட்ரன் வேலை இல்லை முதலமைச்சர் வேலை. ரவுண்ட் தி கிளாக் (Round the clock) 24/7 தேவைப்படுறீங்க. நீங்க ஒரு விரல் புரட்சி பண்ணி படத்துல வந்து பெருசா சீன் எல்லாம் போட்டீங்க. படத்துல ஒரு விரல் புரட்சி, உங்க ஆட்சியில உருட்டுக்கட்டை புரட்சி... 'கத்தி' படத்துல தண்ணிக்கு வாய் கிழிய பேசி சண்டை போட்டீங்க, தண்ணி கேட்டு வந்தார் ஒருத்தர்.. சாமானியர். உங்க துணை சபாநாயகர் வீட்டுல தண்ணி காட்டிட்டீங்க, அது ரொம்ப வேதனையா இருக்குது. ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியோட வீட்டுல வாக்களிச்சவர்—அது உங்களுக்கு வாக்களிச்சவங்க, நான் விஜய் அண்ணாக்குதான் ஓட்டு போட்டேன்னு சொல்றார். உங்களுக்கு வாக்களிச்சவர் வந்து தண்ணி வரலன்னு சொல்ல, பண்டிகை காலத்துல ஒரு வீட்ல தண்ணி வரலன்னா ஒரு சாதாரண குடும்பத்துல எவ்வளவு சிரமப்படுவோம்?

நீங்க மிட்டா மராசுதாருங்க. உங்களுக்கு ஜெனரேட்டர் இருக்கும், உங்களுக்கு மோட்டார் இருக்கும். உங்க துணை சபாநாயகர் டபுள் தண்ணில இருப்பாரு. நான் குடிக்கிற தண்ணியைச் சொல்றேன்; ஒரு டேங்குக்குப் பதிலா ரெண்டு டேங்கு, டபுள் தண்ணில இருப்பாரு. ஏன்னா, அதனால உருட்டுக்கட்டையை அடிக்க வராருல? அப்போ ஒரு அடிப்படைப் பிரச்சினையைப் பத்தி பேசுறதுக்கு ஒரு சாதாரண சாமானியன் வரும்போது, அதை அணுகுகிற ஒரு பக்குவம் கூட இந்த ஆளுகிற ஆட்சியாளருக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு இல்லன்னா, இந்த தமிழ்நாட்டுல ஆட்சிதான் நடக்குதா இல்லை ஜங்கிள் ராஜ், காட்டாட்சி நடக்குதா?

தமிழ்நாட்டில இன்னைக்கு Gun Culture நடக்குது. இப்போ வேலூர் மாவட்டத்துல குடியாத்தத்துக்கு பக்கத்துல பாமக பிரமுகர் ஒருத்தரை துப்பாக்கியால சுட்டுருக்காங்க. துப்பாக்கி கலாச்சாரம் அதிகமா இருக்கு. ஜங்கிள் ராஜ், தமிழ்நாட்டில ஜங்கிள் ராஜ் நடக்குது, காட்டாட்சி நடக்குது. இந்த சட்டம் ஒழுங்க பத்தி பார்த்துக்கிறதுக்கு ஒருவேளை ஆபீசர் இன்காம்பிடெண்ட்டாக (Incompetent) இருக்காங்களா அல்லது முதலமைச்சர் இன்காம்பிடெண்ட்டாக இருக்கிறாரா என்ற ஒரு சந்தேகம் எல்லாருக்கும் இருக்கு.

ஒரு சட்டம் ஒழுங்குன்னா யார் ரெஸ்பான்சிபிள் (Responsible)? தமிழ்நாட்டோட டிஜிபி ரெஸ்பான்சிபிள், ஏடிஜிபி எல் அண்ட் ஓ (Law & Order) ரெஸ்பான்சிபிள், ஐஜி இன்டெலிஜென்ஸ் ரெஸ்பான்சிபிள், சென்னையைப் பொறுத்தவரைக்கும் கூடுதலா சிஓபி (COP) ரெஸ்பான்சிபிள். இவங்க எல்லாம் அதிகாரிகள், இவங்களுடைய வேலை என்ன? ஓட ஓட வெட்டி கொலை செய்றதை கவனத்தில் கொள்ளணும். சென்னை கமிஷனர், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கணும், வன்முறைகள் நடப்பதை தடுக்கணும். சட்டம் ஒழுங்கை முன்கூட்டியே பிரிடிக்ட் (Predict) பண்ணனும். இந்த விஷயத்தை எல்லாம் முதலமைச்சருடைய கவனத்துக்கு கொண்டு போகணும்.

கம்ப்ளையன்ஸ் (Compliance) கொடுக்கணும். கம்ப்ளையன்ஸ்ன்னா வந்து, நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் அப்படிங்கறது முதலமைச்சருக்கு அவ்வப்போது ரிப்போர்ட் கொடுக்கணும். அதை முதலமைச்சர் உட்கார்ந்து ரிவ்யூ (Review) பண்ணனும். முதலமைச்சர் அவங்களுக்கு எல்லாம் அறிவுரை சொல்லணும், ஆலோசனை சொல்லணும், உத்தரவு சொல்லணும். இதுக்கு எல்லாத்துக்கும் புத்தி இருக்கா முதலமைச்சருக்குன்னு எனக்கு தெரியல.

ஆனால், இந்த அதிகாரிகள் எல்லாம் போய் இவர்கிட்ட இன்ஸ்ட்ரக்ஷன் வாங்குறதுக்கோ ஆர்டர்ஸ் வாங்குறதுக்கோ இஸ் நாட் அவைலபிள் (Is not available). அஞ்சு மணிக்கு மேல முதலமைச்சர் காணாம போனார்னா அதிகாரிகள் என்ன பண்ணுவாங்க? நான் இந்த இடத்துல இன்காம்பிடெண்ட் ஆபீசர், இன்காம்பிடெண்ட் சீப் மினிஸ்டரானா, இன்காம்பிடெண்ட் சீப் மினிஸ்டர் தான் ரெஸ்பான்சிபிலிட்டிய நான் பிக்ஸ் பண்ணுவேன். காரணம், அதிகாரிகள் எனிடைம் அவைலபிள்.

காவல்துறை அதிகாரிகளை பார்த்து கேடக்குறேன் உங்களுக்கு சுதந்திரம் இருக்கா? அரசியல் கைதுகளை மட்டுமே பாஞ்சி பாஞ்சி வெடிகாலையில கைது செய்றதுக்கு முதலமைச்சர் உத்தரவு போடுறாரே தவிர, பொதுமக்களுடைய பாதுகாப்புக்கு முதலமைச்சர் உத்தரவு போடலன்னு உங்களுக்கு நல்லா தெரியும். நீங்க போய் நிக்கிறீங்க, பனையூர்ல போய் நிக்க முடியுமா உங்களால?

தமிழ்நாட்டில ஏற்கனவே இருந்த முதலமைச்சர்கள எனிடைம் எனிபாடி கேன் காண்டாக்ட் தி அபிஷியல்ஸ் (Anytime, anybody can contact the officials), அதான் முதலமைச்சருடைய வேலை. ஆனா இன்னைக்கு முதலமைச்சருக்கு அப்படிப்பட்ட ஒரு வேலையை விட்டுட்டு இவர் எங்கேயோ போயிருக்கிறார். இதுல வேற ரொம்ப அழகா சொல்றார், ஒழுக்கத்தை பத்தி பேசினார். கொஞ்ச நாளைக்கு முன்னாடி இந்த போதைப்பொருள் விஷயங்களை பத்தி பேசும்போது முதலமைச்சர் சொன்னாரு: "இது ஒரு ஃபன்னா இருக்கும், என்ஜாய் பண்ணுங்க, ஆனா அடிமை ஆயிடாதீங்க"ன்னார். குற்றச் சம்பவங்கள் இப்ப நடக்கறதெல்லாம் வந்து தனிமனித ஒழுக்கம்னு பேசினார். ஆனா திமுக ஆட்சியில் இருக்கும்போது தனிமனித ஒழுக்கம் இல்ல? இப்ப முதலமைச்சர் விஜய் வந்து தனிமனித ஒழுக்கத்தை பத்தி பேசுறதுக்கு என்ன யோக்கியதை இருக்குது? எல்லாம் கல்யாணத்துக்கு குடும்பத்தோடு வந்து வாழ்த்துங்கன்னு சொல்லுவாங்க. இதுக்கு மேல நான் ஒன்னும் பேசல. உனக்கு தனிமனித ஒழுக்கத்தை பத்தி பேசுறதுக்கு என்ன தகுதி இருக்கு? ஃபன்னா இருக்கும், என்ஜாய் பண்ணுங்க, அடிமை ஆயிடாதீங்க. அப்போ உங்களுடைய என்கரேஜ்மென்ட்தான் இன்னைக்கு போதை கலாச்சாரம் அதிகமா இருக்கு.

அதனுடைய விளைவுதான், கஞ்சாவை பயன்படுத்திட்டு பட்டாசு வெடிச்சிட்டு இருந்தாங்க தேனியில நடுரோட்ல வெடிக்கும்போது, ஏன் நடுரோட்ல வெடிக்கிறீங்கன்னு சொல்லி ஒரு உதவி ஆய்வாளர் கேள்வி கேட்கிறார். அதை தட்டி கேட்ட உதவி ஆய்வாளரைக் கொல்றாங்க. யுவர் ஃபன், யுவர் என்ஜாய்மென்ட், உங்களோட அட்வைஸ்—கொலை செய்றாங்க. ஆனா உங்க சைடுல இருந்து வரக்கூடிய அறிக்கை என்ன? முதலமைச்சர் சைடுல இருந்து வரக்கூடிய அறிக்கை என்ன? "பணியின் போது உயிரிழந்தார்." ஆனா காவல்துறையில் இருந்து வரும்போது பணி முடிச்சிட்டு வீட்டுக்கு போறார். என்ன, குற்றவாளிகளை காப்பாத்துறாங்களா? இந்த ஃபன் என்ஜாய்மெண்ட்ல இருக்கக்கூடிய கல்பிரிட் (Culprit) சீப் மினிஸ்டர் காப்பாத்துறாரா?

இன்னொரு பெரிய ஒரு நகைச்சுவை— கோடம்பாக்கத்துல ஒரு சம்பவம் நடந்தது. எரிபொருள் வீச்சு... அத பெட்ரோல் பாம்-கு ஒரு அழகான பெயரை இந்த தமிழ்நாடு காவல்துறை கண்டுபிடிச்சிருக்கு! இது தமிழ்நாடு காவல்துறை கண்டுபிடிச்சதா இல்ல ஜான் ஆரோக்கியசாமி ஸ்ட்ராடஜி வகுத்து கொடுக்கிற, ஒரு காவல்துறைக்கு சொல்லிருக்கிறாரா தெரியல. எனக்குத் தெரிஞ்சு காவல்துறை இதை சொல்லல. பல உத்தரவுகளை இந்த அரசியல் ஆய்வாளர்கள் என்று சொல்லக்கூடிய, முதலமைச்சருக்கு ஆலோசனை சொல்ல கொடுக்கிறவங்க சொல்றதுதான் அதிகாரிகள் கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கு.

இப்போ எரிபொருள்ன்னா என்ன சார்? கம்பி மத்தாப்பா சார்? அது புசுவானமா? அது பாம் (Bomb)ன்னு சொல்றதுக்கு இவங்களுக்கு வெட்கமா இருக்கு, அச்சமா இருக்கு. அப்போ நடக்கிற குற்றச் சம்பவத்தை தண்டிப்பதற்கு வழி இல்லை, அதுக்கு கட்ஸ் (Guts) இல்லை. ஆனா அதுக்கு ஒரு புனைபெயர் வைக்கிறார்கள்! ஒரு துணை சபாநாயகரை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரை, ஒரு சாதாரண காமன்மேன் (Common man) வாக்களிச்ச ஒரு சிட்டிசன் வந்து சந்திக்கும் போது அடிக்கிறார்னா, இந்த நாட்டுல சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு?

அதைவிட இன்னும் ஒரு படி போய் மேல... அதாவது நான் சொல்லும்போது சொல்றதுக்கே வெட்கப்படுறேன். இந்த தவெக-ல எம்எல்ஏ இருக்கிறவன்லாம் வந்து இதுக்கு முன்னாடி மக்கள் பணி ஆற்றியிருக்கிறானங்களா இல்ல இவங்கலாம் வந்து வேற ஏதனா வேலை செஞ்சிருந்தாங்களா எங்களுக்கு ஒன்னும் புரியல. அவங்க தலைவருக்கு ரசிகனா இருந்து டிக்கெட் வித்தவன்லாம் எப்படி இருப்பான் சார்? ஒரு பெண் ஆபீசர் கலெக்டருக்கு எப்படி சார் இவன் நடந்துக்கிறான்? ரொம்ப அதிகமா சொல்றேன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனே இல்ல, அவன் ஒரு... ஒரு பெண் அதிகாரி, அந்த அம்மையார் கிட்ட ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி நடந்துக்கணும்? நானும் சட்டமன்ற உறுப்பினரா இருந்திருக்கிறேன். காவல்துறையில் இருக்கட்டும் சரி ஆபீசர்ஸ் எத்தனையோ பெண் உயர் அதிகாரிகள் இருக்கிறாங்க. எந்த நேரத்துக்கு வேணாலும் அவங்களுக்கு பிரச்சினைகளுக்கு மெசேஜ் கொடுத்தா கண்டுபிடிச்சதா இல்ல ஜான் ஆரோக்கியசாமி ஸ்ட்ராடஜி வகுத்து கொடுக்கிற, ஒரு காவல்துறைக்கு சொல்லிருக்கிறாரா தெரியல. எனக்குத் தெரிஞ்சு காவல்துறை இதை சொல்லல. பல உத்தரவுகளை இந்த அரசியல் ஆய்வாளர்கள் என்று சொல்லக்கூடிய, முதலமைச்சருக்கு ஆலோசனை சொல்ல கொடுக்கிறவங்க சொல்றதுதான் அதிகாரிகள் கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கு.

இப்போ எரிபொருள்ன்னா என்ன சார்? கம்பி மத்தாப்பா சார்? அது புசுவானமா? அது பாம் (Bomb)ன்னு சொல்றதுக்கு இவங்களுக்கு வெட்கமா இருக்கு, அச்சமா இருக்கு. அப்போ நடக்கிற குற்றச் சம்பவத்தை தண்டிப்பதற்கு வழி இல்லை, அதுக்கு கட்ஸ் (Guts) இல்லை. ஆனா அதுக்கு ஒரு புனைபெயர் வைக்கிறார்கள்! ஒரு துணை சபாநாயகரை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரை, ஒரு சாதாரண காமன்மேன் (Common man) வாக்களிச்ச ஒரு சிட்டிசன் வந்து சந்திக்கும் போது அடிக்கிறார்னா, இந்த நாட்டுல சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு?

அதைவிட இன்னும் ஒரு படி போய் மேல... அதாவது நான் சொல்லும்போது சொல்றதுக்கே வெட்கப்படுறேன். இந்த தவெக-ல எம்எல்ஏ இருக்கிறவன்லாம் வந்து இதுக்கு முன்னாடி மக்கள் பணி ஆற்றியிருக்கிறானங்களா இல்ல இவங்கலாம் வந்து வேற ஏதனா வேலை செஞ்சிருந்தாங்களா எங்களுக்கு ஒன்னும் புரியல. அவங்க தலைவருக்கு ரசிகனா இருந்து டிக்கெட் வித்தவன்லாம் எப்படி இருப்பான் சார்? ஒரு பெண் ஆபீசர் கலெக்டருக்கு எப்படி சார் இவன் நடந்துக்கிறான்? ரொம்ப அதிகமா சொல்றேன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனே இல்ல, அவன் ஒரு... ஒரு பெண் அதிகாரி, அந்த அம்மையார் கிட்ட ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி நடந்துக்கணும்? நானும் சட்டமன்ற உறுப்பினரா இருந்திருக்கிறேன். காவல்துறையில் இருக்கட்டும் சரி ஆபீசர்ஸ் எத்தனையோ பெண் உயர் அதிகாரிகள் இருக்கிறாங்க. எந்த நேரத்துக்கு வேணாலும் அவங்களுக்கு பிரச்சினைகளுக்கு மெசேஜ் கொடுத்தா ரிப்ளை பண்ணக்கூடிய ஆபீசர்ஸ்தான். அதுவும் குறிப்பா சென்னையில மழை நேரங்கள்ல, இரவு நேரங்கள்ல பெண் அதிகாரிகள் எல்லாம்—காவல்துறை அதிகாரி ஆபீசர்—12, 1 மணிக்குப் கூட நாங்க வந்து அவங்களுக்கு பிரச்சினைகளைச் சொல்வோம், இம்மீடியட்டா ரியாக்ட் பண்ணுவாங்க. சில நேரங்கள்ல பெண் ஆபீசர்ஸ் அந்த நேரத்துல நம்ம அவங்களுக்கு தொல்லை கொடுக்கக் கூடாதுன்னு சொல்லிட்டு, அவங்களுக்கு அடுத்து இருக்கிற ஆபீசர் ஜென்ட்ஸ்-களுக்கு நாங்க வந்து மக்கள் பிரச்சினையை பத்தி பேசி இருக்கிறோம். இது பண்பட்ட அரசியல். நாங்கெல்லாம் கொள்கையோட அரசியலுக்காக வந்திருக்கோம். இவங்கல்லாம் சினிமாட்டிக்கட் ஃபேன்ஸா வந்தவங்க.

ஒரு பெண் ஆபீசருக்கு இந்த மாதிரி ஒரு தொல்லை கொடுக்கிறாங்கன்னா வெட்கமா இல்லையா முதலமைச்சருக்கு? "நான் பெண்களை காப்பாத்துவதற்காக வந்திருக்கிற அவதார புருஷன்"னு சொன்னீங்களே முதலமைச்சர் விஜய், உங்க முகத்தை கண்ணாடி முன்னாடி போய் பாருங்க. உங்களுடைய எம்எல்ஏக்கள் எவ்வளவு கேவலமாக நடந்துக்கறாங்கன்னு! இதுக்கு நான் எம்எல்ஏவை குறை சொல்ல மாட்டேன்; இதுக்கு முழு முதல் குற்றவாளி, கல்பிரிட் நம்பர் ஒன் அக்யூஸ்ட், சீப் மினிஸ்டர் ஆஃப் தமிழ்நாடு, மினிஸ்டர் ஜோசப் விஜய் தான்.

நம்ம திமுக-ல இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தப்பு செஞ்சா ராஜினாமா செய்யச் சொல்லி வாய்கிழிய வக்கனையா பேசுனீங்களே விஜய் முதலமைச்சர் அவர்களே, இந்த ரெண்டு சட்டமன்ற உறுப்பினரும் ராஜினாமா செய்யணும்! இவங்க மேல வந்து கிரிமினல் நடவடிக்கை எடுக்கணும். கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் மேல கிரிமினல் வழக்கு தொடரனும். துறையூர் சட்டமன்ற உறுப்பினரும், துணை சபாநாயகரா இருக்கிறவர் மேலேயும் கிரிமினல் வழக்கு தொடரணும். டிஜிபி சுட்நாட் கீப் மௌன் (DGPs should not keep mum). நான் கேட்கிறேன்: காவல் துறை தலைவர் மகேஷ் குமார் அகர்வால் அவர்களே, நீங்கள் மௌனம் காக்கக் கூடாது! இது காவல்துறைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப்பெரிய இழுக்கு. உங்கள் டிபார்ட்மெண்டல இருக்கக்கூடிய ஒரு சப்-இன்ஸ்பெக்டரை அடிச்சு கொல்றாங்கன்னா, உங்களுக்கே பாதுகாப்பு இல்லை. சீப் செக்ரட்டரி, நீங்கள் அமைதியா இருக்கக் கூடாது; ஆபீசர் ஹேஸ் பீன் அட்டாச்ட் (An officer has been attacked), யூ ஆர் தி சோல் ப்ரொடக்டர் ஆஃப் ஆபீசர்ஸ் (You are the sole protector of officers). சீப் செக்ரட்டரி, டிஜிபி, போலீஸ்களை பாதுகாக்கக்கூடிய இடத்துல நீங்கள் இருக்கீங்க, வீணா மாட்டிக்காதீங்க.

ஒரு அமைச்சர்கள் வந்து பேட்டி கொடுக்கணும்னா, பக்கத்துல அதிகாரிகள் இருக்கும்போது அரசு சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பேசணும். தரவுகளோடு பேசணும். அரசாங்கத்தின் நடவடிக்கையைப் பற்றி பேசணும். இவங்க கண்றாவி அரசியல் பேசுறதுக்கு எதுக்கு அதிகாரிகளை உட்கார வைக்கிறாங்க பக்கத்துல? அதுவும் பெண் அதிகாரிகளை பக்கத்துல உட்கார வச்சிட்டு இந்த ஸ்டாண்ட்அப் காமெடியன் 'ஆண்மை இருக்கா?'ன்னு கேட்கிறார்; நான் கேட்கிறேன்: உங்க முதலமைச்சருக்கு ஆளுமை இருக்கா? ஆட்சி செய்வதற்கு ஆளுமை இருக்கா? 17 கொலை நடந்திருக்கு ஒரே நாள்ல, உங்க முதலமைச்சருக்கு ஆளுமை இருக்கா? ஒரு பெண் அதிகாரி பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு இன்னைக்கு போலீஸ் அவங்களுக்கு தனி பாதுகாப்பு போட்டுக்கற அளவுக்கு ஆகியிருக்குதே, விஜய்க்கு ஆளுமை இருக்கா? ஆட்சி செய்கிற திறன் இருக்கா?

இந்த கேள்வி எல்லாம் நாங்க உங்ககிட்ட கேட்கிறதுக்கு காரணம் என்னன்னா, இதை நாங்க சும்மா விட போறது இல்ல. காவல்துறையும் சரி, சீப் செக்ரட்டரியும் சரி, நடந்திருக்கிற சம்பவங்களுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கலன்னா, திமுக சும்மா விடாது. ஆறு மாசத்துல இந்த ஆட்சி எப்படி இருக்குதுன்னு ஒரே வரியில சொல்லணும்னா: குரங்கு கையில கொடுத்த பூமாலை! முதலமைச்சர் குரங்கு கையில தமிழ்நாட்டினுடைய அழகான மலர் மாலையை கையில கொடுத்திருக்கிறோம்; குரங்கு கையில கிடைத்திருக்கிற பூமாலை போன்றுதான் இன்றைக்கு தமிழ்நாடு ஆயிருக்கிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
8148231942 / 8144337349

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org

தலைக்கவசம் அணியுங்கள் - உயிரைக் காப்பாற்றுங்கள்.

'RX' திரைப்படத்தின் முதல் பார்வை போஸ்டர் வெளியீடு!



சென்னை – 11 நவம்பர், 2026

'RX' திரைப்படத்தின் முதல் பார்வை போஸ்டர் வெளியீடு! இந்தியத் திரையுலகின் முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் புதிய திரைப்படத்திற்கு RX எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் ரெஜினா கசாண்ட்ரா, நாசர் மற்றும் ரமேஷ் திலக் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் இன்று வெளியிடப்பட்டுள்ளது. நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் ஆகியோரால் தொடங்கப்பட்ட மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம், இந்தியாவின் முன்னணி திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. குறிப்பாக, தெலுங்குத் திரையுலகில் ஸ்ரீமந்துடு, ரங்கஸ்தலம், உபென்னா மற்றும் மாபெரும் வெற்றிபெற்ற புஷ்பா உள்ளிட்டப் பல வெற்றிப் படங்களை தயாரித்துள்ளது. இந்நிறுவனம், பிரம்மாண்டமான திரைப்பட உருவாக்கத்திற்கும், வலுவான கதைக்களங்களுக்கும் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. தெலுங்கு மட்டுமல்லாது, பிற மொழித்திரைப்படங்களையும் மைத்ரி நிறுவனம் தயாரிக்கிறது. நடிகர் அஜித் குமார் நடித்த 'குட் பேட் அக்லி' மற்றும் 'மொத ராத்திரி' உள்ளிட்ட திரைப்படங்கள் தயாரித்து தமிழ் திரையுலகிலும் முத்திரை பதித்துள்ளது. தற்போது இயக்குநர் லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் நிறுவனத்துடன் இணைந்து RX திரைப்படத்தை தயாரிக்கிறது மைத்ரி மூவி மேக்கர்ஸ். முன்னணி தயாரிப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், புதிய திறமையாளர்களுக்கும், புதுமையான கதைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் திரைப்படங்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றனர். படைப்புச் சுதந்திரம், தயாரிப்பு அனுபவம், நிதி வலிமை மற்றும் விரிவான சந்தை வாய்ப்புகள் ஆகியவை ஒன்றிணைவதன் மூலம், வழக்கமான வணிகத் திரைப்படங்களின் எல்லைகளைக் கடந்து தனித்துவமான கதைகளை உருவாக்க இதுபோன்ற கூட்டணி உதவும். RX திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் ரெஜினா கசாண்ட்ரா மற்றும் அவருடன் நடிகர் நாசர் இருவரும் வித்தியாசமான தோற்றத்தில் இடம்பெற்றுள்ளனர். 'Truth Always Demands a Voice!' என்ற வாசகத்துடன் வெளியாகியுள்ள இந்தப் போஸ்டர், படத்தின் கதைக்களத்தை வெளிப்படுத்தாமல் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. சில நேரங்களில் சில மனிதர்கள் மற்றும் பாம் ஆகிய திரைப்படங்கள் மூலம் கவனம் ஈர்த்த இயக்குநர் விஷால் வெங்கட் இப்படத்தை இயக்குகிறார். ஹரிஹரன் ராஜுவின் கதைக்கு ஆஷாமீரா ஐயப்பன் வசனங்கள் எழுதியுள்ளார். ரமேஷ் திலக் மற்றும் ஸ்ரீஜா ரவி ஆகியோரும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தின் முழுப் படப்பிடிப்பும் சென்னையில் நிறைவடைந்துள்ளது. தொழில்நுட்பக் குழுவில் ஹெஷாம் அப்துல் வஹாப் இசையமைப்பாளராகவும், எஸ்.கே. செல்வகுமார் ஒளிப்பதிவாளராகவும், ஜி.கே. பிரசன்னா படத்தொகுப்பாளராகவும், கே. மனோஜ் குமார் கலை இயக்குநராகவும் பணியாற்றுகின்றனர். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் சார்பில் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் ஆகியோர் தயாரிக்கும் இப்படம், லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் நிறுவனத்துடன் இணைந்து உருவாகிறது. பிரதீப் பூபதி இணைத் தயாரிப்பாளராகப் பணியாற்றுகிறார். RX திரைப்படம் குறித்த மேலும் பல சுவாரஸ்யமான தகவல்கள் விரைவில் வெளியாகும்.

'பொலிமேரா 3' படத்தில் ஆக்ஷன் கிங் அர்ஜுன் நடிக்கும் 'வீராவி' கதாபாத்திரத்தின் அதிரடியான ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மொழிகளில் விரைவில் திரைக்கு வருகிறது 'பொலிமேரா 3'



சென்னை – 11 நவம்பர், 2026

ரசிகர்களின் உற்சாக வரவேற்போடு கடந்த இரு பாகங்களாக பெரும் வெற்றி பெற்ற 'பொலிமேரா' திரைப்பட வரிசையின் மூன்றாம் பாகமான 'பொலிமேரா 3' விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், இப்படத்தில் வீராவி எனும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் ஆக்ஷன் கிங் அர்ஜுனின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டுள்ளது. வம்சி நந்திபாடி என்டர்டெயின்மென்ட்ஸ் சார்பில் வெற்றிப்பட தயாரிப்பாளர் வம்சி நந்திபாடி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் எல்.எல்.பி. நிறுவனத்தின் (ஏசியன் குழுமம்) பரத் நரங்குடன் இணைந்து இப்படத்தைத் தயாரிக்கிறார். டாக்டர் அனில் விஸ்வநாத் இயக்கத்தில் உருவாகும் இப்படம், 'பொலிமேரா' திரை அனுபவத்தை இன்னும் பிரம்மாண்டமாக விரிவுபடுத்தி தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் ரசிகர்களுக்கு வழங்க உள்ளது. தீபாவளியை முன்னிட்டு வெளியாகி உள்ள ஆக்ஷன் கிங் அர்ஜுனின் அதிரடியான ஃபர்ஸ்ட் லுக், ரசிகர்களின் பாராட்டுகளை குவித்து படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. இதுவரை நடித்திராத வேடத்தில் 'பொலிமேரா 3' திரைப்படத்தில் அர்ஜுன் நடிப்பது குறிப்பிடத்தக்கது. முதல் பார்வை க்ளிம்ப்ஸ் தொடங்கும் விதமே பார்வையாளர்களை மர்ம உலகிற்குள் அழைத்துச் செல்கிறது. இருள் சூழ்ந்த கோயிலின் பின்னணியில் தொடங்கும் காட்சிகள், படிப்படியாக அமாவாசையின் மர்மமான சூழலை வெளிப்படுத்துகின்றன. மகாவிஷ்ணு, சிவபெருமான், அனந்த பத்மநாப சுவாமி என்று ஆன்மிக தரிசனங்களும் கிடைக்கின்றன. இவ்வாறு ஆன்மிகம், மர்மம் மற்றும் அமானுஷ்யம் உள்ளிட்ட அம்சங்கள் ஒன்றிணைந்த தனித்துவமான உலகத்தை இந்தக் காட்சிகள் அழுத்தமாக நிறுவுகின்றன. சத்யம் ராஜேஷ், கொமரையாவாக மாந்திரீகச் சடங்குகளில் ஈடுபடும் காட்சிகள், படத்தின் மர்மத்தையும் பதற்றத்தையும் மேலும் அதிகரிக்கின்றன. பரபரப்பான காட்சியமைப்பும், பின்னணி சூழலும் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலைத் தூண்டுகின்றன. இத்தகைய விறுவிறுப்பான தருணங்களுக்குப் பிறகு, அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த பிரம்மாண்டமான அறிமுகம் நிகழ்கிறது. ஆக்ஷன் கிங் அர்ஜுன் சர்ஜா, 'வீராவி' என்ற கதாபாத்திரத்தில் கம்பீரமாகத் தோன்றுகிறார். கையில் வாளேந்திய மிடுக்கான அவரது அனல் பார்வை மற்றும் கம்பீரமான உடல்மொழி என ஒவ்வொன்றும் ரசிகர்களுக்கு திரை விருந்தாக அமைந்துள்ளன. இந்தக் கதாபாத்திர அறிமுகம் க்ளிம்ப்ஸின் மிகப்பெரிய சிறப்பம்சமாகத் திகழ்கிறது. காமாட்சி பாஸ்கர்லா, பாலாதித்யா, கெட்டப் ஸ்ரீனு, ராகேந்து மௌலி உள்ளிட்ட பல திறமையான நடிகர்கள் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். வம்சி நந்திபாடி என்டர்டெயின்மென்ட்ஸ் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் எல்.எல்.பி. (ஏசியன் குழுமம்) நிறுவனங்கள் சார்பில் வம்சி நந்திபாடி மற்றும் பரத் நரங் தயாரிக்கும் 'பொலிமேரா 3' திரைப்படத்தை டாக்டர் அனில் விஸ்வநாத் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். சித்தார்த் ஒளிப்பதிவு செய்ய கிருஷ்ண பிரசாத் இசையமைக்கிறார்.

நாட்டின் அறிவியல் சாதனைகளையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் எளிய மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்: மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்

சென்னை – 11 நவம்பர், 2026

புவி அமைப்புகள் அறிவியல் குழுமத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது. அறிவியல் சாதனைகளையும் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் எளிய மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் அவர் வலியுறுத்தினார். அறிவியல் ஆராய்ச்சிகள் குறித்த தகவல்கள் சாமானிய மக்களுக்கும் எளிதல் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மக்களை மையப்படுத்திய அறிவியல் தகவல்தொடர்பு முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய கடல் வள தொழில்நுட்பக் கழகம் (என்ஐஓடி), இந்திய தேசிய கடல்சார் தகவல் சேவைகள் மையம், புவி அறிவியல் ஆய்வு மையம், இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம், தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆய்வு மையம் ஆகிய ஐந்து முக்கியக் கட்டமைப்புகளின் ஓராண்டுச் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. பெருங்கடல் இயக்கம், ஆழ்கடல் ஆய்வுப் பணிகள் குறித்து அமைச்சர் விரிவாக ஆய்வு செய்தார். குறிப்பாக, ஆழ்கடல் மனித ஆய்வுக்கான 'மத்ஸ்யா-6000' திட்டம் மற்றும் இந்தோ-பிரெஞ்சு கூட்டு முயற்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் ஆய்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. லட்சத்தீவுகளில் குடிநீர்த் திட்டங்கள், கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல் போன்ற உள்நாட்டுத் தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

போபாலுக்கு கடத்தி வரப்பட்ட 6 கிலோ போதைப்பொருள் பறிமுதல்: கடத்தல்காரர் கைது

சென்னை – 11 நவம்பர், 2026

தில்லியில் இருந்து போபாலுக்கு கடத்தி வரப்பட்ட 6.642 கிலோ எடையுள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. உளவுத்துறைத் தகவலின் அடிப்படையில், போபாலுக்கு பேருந்தில் பயணம் செய்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரை 2026 நவம்பர் 5 அன்று வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் கைது செய்தனர். பயணியின் உடைமைகளைச் சோதனையிட்ட அதிகாரிகள், அவரது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த படிக வெண்மை நிறப் பொருளைக் கைப்பற்றினர்.

போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட களச் சோதனையில், கைப்பற்றப்பட்ட பொருள் ஆம்ஃபெடமைன் எனும் போதைப்பொருள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், குற்றம் சாட்டப்பட்ட பயணி கைது செய்யப்பட்டார். பெங்களூரு காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட மற்றொரு போதைப்பொருள் வழக்கில் அவர் ஏற்கனவே பிணையில் வெளியே வந்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொல்கத்தா விமான நிலையத்தில் வெளிநாட்டு கரன்சிகள் கடத்தல் முயற்சி முறியடிப்பு: ரூ.3.5 கோடி மதிப்பிலான வெளிநாட்டு பணம் பறிமுதல் மற்றும் 7 பேர் கைது

கொல்கத்தா – 11 நவம்பர், 2026

கொல்கத்தா நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பன்னாட்டு விமான நிலையத்தில் வெளிநாட்டு பணம் கடத்தப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், பாங்காக்கிற்குப் பயணம் செய்யவிருந்த பயணிகளை வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் 2026 நவம்பர் 6 அன்று சோதனையிட்டனர். அவர்களில் சிலரது உடமைகள் மற்றும் கைப்பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க டாலர், பிரிட்டன் பவுண்டு உள்ளிட்ட ரூ.3.12 கோடி மதிப்பிலான வெளிநாட்டுப் பணத்தை (கரன்சி) அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

குறிப்பிட்ட நபர்கள் புத்தகங்கள், பைகள், காலணிகள் மற்றும் துணிகளுக்குள் அதிநவீன முறையில் பணத்தை மறைத்துக் கடத்த முயன்றது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டு சுங்கச் சட்டம் மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சில பயணிகளிடம் இருந்து ரூ.39 லட்சம் மதிப்பிலான வெளிநாட்டு பணம் பறிமுதல் செய்யப்பட்டு சுங்கத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.


வீட்ல Couple...ஆபிஸ்ல Strangers!

சென்னை – 11 நவம்பர், 2026 வீட்ல Couple...ஆபிஸ்ல Strangers! ஜியோஹாட்ஸ்டாரின் புதிய அலுவலக நகைச்சுவைத் தொடர் ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ நவம்பர் 18 ஆம் தேதி முதல் ப்ரீமியர் ஆகிறது! நடிகர்கள் பிரதீப் ஆண்டனி, ஸ்மேஹா மணிமேகலை, சனம் ஷெட்டி மற்றும் மகிழ் திருமேனி ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள இந்தப் புதிய தமிழ் தொடர், ஒவ்வொரு புதன்கிழமையும் நான்கு எபிசோடுகளுடன் வெளியாகிறது. திருமண வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கும் கணவன், மனைவி, வாரத்தில் ஐந்து நாட்கள் அலுவலகத்தில் ஒருவருக்கொருவர் தெரியாத அந்நியர்களைப் போல நடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் என்னவாகும்? இந்தச் சுவாரஸ்யமான கேள்விக்கு நகைச்சுவை கலந்த பதிலுடன் ஜியோஹாட்ஸ்டார் தனது புதிய தமிழ் ஒரிஜினல் தொடரான ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடரை அறிமுகப்படுத்துகிறது. இந்தத் தொடர் நவம்பர் 18 ஆம் தேதி முதல் வெளியாகிறது.

ஒவ்வொரு புதன்கிழமையும் நான்கு புதிய எபிசோடுகள் வெளியாகும். கார்ப்பரேட் அலுவலகப் பின்னணியில் உருவாகியுள்ள ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடர், குடும்பச் செலவுகளைச் சமாளிக்கப் போராடும் இளம் தம்பதியான அறிவு மற்றும் ஐஸ்வர்யாவைச் சுற்றி நகர்கிறது.

இருவருக்கும் ஒரே ஐடி நிறுவனத்தில் வேலை கிடைக்கிறது. ஆனால், அந்த நிறுவனத்தின் கடுமையான விதிமுறையின்படி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகப் பணிபுரியக் கூடாது. இதனால் தங்களது வேலையையும் பொருளாதார நிலையையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில், தங்களது திருமண உறவை மறைத்து, அலுவலகத்தில் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் போல நடந்துகொள்ள இருவரும் முடிவு செய்கின்றனர். இதற்குப் பிறகு ஆபிஸ் மீட்டிங்ஸ், காபி பிரேக்ஸ், சக ஊழியர்களுடனான உரையாடல்கள் என ஒவ்வொரு தருணத்திலும் அவர்களது ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்ற பதற்றம் உருவாகிறது.

கண்டிப்பான மேலாளரைச் சமாளிப்பது முதல் ஆர்வத்துடன் கேள்வி கேட்கும் சக ஊழியர்களை எதிர்கொள்வது வரை, தங்களது திருமண வாழ்க்கையை மறைப்பதற்காகத் தொடர்ந்து புதுப்புது பொய்களைக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நகைச்சுவைக்கு மத்தியில், இன்றைய சூழலில் பணிபுரியும் இளம் தம்பதிகளின் வாழ்க்கைப் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், உறவுச் சிக்கல்கள் மற்றும் கார்ப்பரேட் வாழ்க்கையின் அன்றாட யதார்த்தங்களையும் இந்தத் தொடர் பேசுகிறது. இந்தத் தொடரில் பிரதீப் ஆண்டனி மற்றும் ஸ்மேஹா மணிமேகலை ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களான அறிவு மற்றும் ஐஸ்வர்யாவாக நடித்துள்ளனர். இவர்களுடன் திரைப்படங்களில் நடித்ததன் மூலமும், பிக்பாஸ் தமிழ் சீசன் 4 நிகழ்ச்சியின் மூலமும் பிரபலமான சனம் ஷெட்டி மற்றும் ‘தடம்’, ‘கலகத் தலைவன்’, ‘விடாமுயற்சி’ உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் மகிழ் திருமேனி ஆகியோரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தத் தொடர் குறித்து நடிகர் பிரதீப் ஆண்டனி பகிர்ந்து கொண்டதாவது, “திருமணமானதை அலுவலகத்தில் மறைப்பது சாதாரண விஷயம் இல்லை. அப்படி மறைக்கும்போது என்னவாகும் என்பதை நகைச்சுவை கலந்து காட்ட இருக்கிறது ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடர். ஒரு நல்ல கணவராக இருப்பதற்கும், அலுவலகத்தில் அந்நியரைப் போல நடிப்பதற்கும் இடையில் அறிவு தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பார். ஒவ்வொரு சூழலையும் கட்டுப்படுத்த அவர் முயற்சிக்கும்போதெல்லாம் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். அலுவலக வேலைக்கு செல்பவர்கள் அனைவரும் தங்களை இதில் தொடர்புபடுத்திக் கொள்ள முடியும். இந்தத் தம்பதி தங்களது ரகசியத்தை எப்படிக் காப்பாற்றப் போராடுகிறார்கள் என்பதைப் பார்வையாளர்கள் மிகவும் ரசிப்பார்கள் என்று நம்புகிறேன்” என்றார். நடிகை ஸ்மேஹா மணிமேகலை பகிர்ந்து கொண்டதாவது, “திருமணமானவர்கள் பெரும்பாலும் வீட்டிலும் வெளியிலும் வெவ்வேறு விதமாக நடந்துகொள்வார்கள். ஆனால், அலுவலகத்தில் தங்களது கணவரையே தெரியாது என்று நடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் எப்படி இருக்கும்? ஐஸ்வர்யா தனது உறவு, வேலை மற்றும் எப்போது ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம் என அனைத்தையும் சமாளிக்க வேண்டும். இதில் வரும் சூழல்கள் சிரிப்பை ஏற்படுத்தினாலும், இணைந்து ஒரு வாழ்க்கையை உருவாக்கப் போராடும் இருவரின் உண்மையான கதையும் இதில் இருக்கிறது" என்றார். நடிகை சனம் ஷெட்டி,



“திரைத்துறைக்கு வருவதற்கு முன்பு ஐடி துறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கு இருப்பதால், இந்தத் தொடரின் கார்ப்பரேட் பின்னணியையும் அலுவலக வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளையும் உடனடியாக என்னால் தொடர்புபடுத்திக் கொள்ள முடிந்தது. ஆபிஸ் மீட்டிங்ஸ், அரசியல், சக ஊழியர்கள் மற்றும் எதிர்பாராத சூழல்கள் என அனைத்துமே எனக்கு மிகவும் பரிச்சயமானவை. அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் இந்த அனுபவங்களை நகைச்சுவையான சூழல்களாக மாற்றியிருப்பதுதான் ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடரின் சிறப்பு. பார்வையாளர்கள் ரசிப்பதுடன் தங்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய புதுமையான நகைச்சுவைத் தொடர் இது” என்றார். சந்திரபோஸ் கதாபாத்திரத்தில் நடித்துள்ள மகிழ் திருமேனி பகிர்ந்து கொண்டதாவது, “ஒரு சூழலில் இருந்து இயல்பாக உருவாகும் நகைச்சுவை மிகவும் இயல்பாக இருக்கும். தங்களது திருமண வாழ்க்கையைப் பிறரிடமிருந்து மறைக்கப் போராடும் இரண்டு மனிதர்கள் என்ற எளிமையான, அதேசமயம் சுவாரஸ்யமான கதைக்களத்தைக் கொண்டது ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடர். பணியிடச் சூழல், ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான மோதல்கள், தொடர்ந்து ஏற்படும் தவறான புரிதல்கள் என நகைச்சுவைக்கு ஏராளமான வாய்ப்புகள் இதில் உள்ளன. இந்தத் தொடரில் பணியாற்றியது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது” என்றார். அப்துல் கபீஸ் இயக்கத்தில், ஜெகன் பாஸ்கரன் தயாரித்துள்ள ‘மிஸ்டர் & மிஸஸ் ஆபிஸ்’ தொடர், ஜியோஹாட்ஸ்டாரின் லாங் ரன்னிங் ஷோஸ் வரிசையில் இணைகிறது. மொத்தம் 100 எபிசோடுகளைக் கொண்ட இந்தத் தொடரில், ஒவ்வொரு வாரமும் நான்கு எபிசோடுகள் வெளியாகும். அலுவலக நகைச்சுவை, காதல் மற்றும் கதாபாத்திரங்களின் மாறிவரும் உறவுகள் எனப் பல அம்சங்களுடன் வாரந்தோறும் பார்வையாளர்களுக்கு புதுமையான பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்கவுள்ளது.

ஜியோஹாட்ஸ்டார் பற்றி: ஜியோஹாட்ஸ்டார் இந்தியாவின் முன்னணி ஸ்ட்ரீமிங் தளங்களில் ஒன்று. இது ஜியோசினிமா மற்றும் டிஸ்னி+ ஹாட்ஸ்டார் ஆகியவற்றின் இணைப்பின் மூலம் உருவாக்கப்பட்டது. சிறப்பான கதைக்களங்கள், புதுமையான தொழில்நுட்பத்துடன் ஜியோஹாட்ஸ்டார் இந்தியா முழுவதும் உள்ள அனைவருக்கும் பொழுதுபோக்கை மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு ஜூலை-செப்டம்பர் 2026 காலாண்டு அறிக்கை வெளியீடு: கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரிப்பு

சென்னை – 11 நவம்பர், 2026 மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்தின் கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பின் ஜூலை-செப்டம்பர் 2026 காலாண்டுக்கான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, நாடு முழுவதும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான ஒட்டுமொத்த தொழிலாளர் பங்கேற்பு விகிதம் கடந்த காலாண்டில் 54.6% ஆக இருந்த நிலையில், நடப்பு காலாண்டில் 55.5% ஆக உயர்ந்துள்ளது. கிராமப்புறங்களில் இந்த விகிதம் 58.1% ஆக அதிகரித்துள்ளது. இதேபோல், ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு விகிதம் முந்தைய காலாண்டில் 51.7%-லிருந்து 52.7% ஆக உயர்ந்துள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்பு விகிதம் 55.6% ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் முந்தைய காலாண்டில் 5.4% ஆக இருந்த நிலையில், நடப்பு காலாண்டில் 5.1% ஆகக் குறைந்துள்ளது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 4.8%-லிருந்து 4.3% ஆகக் குறைந்துள்ளது. நகர்ப்புறங்களில் இது 6.8% ஆக உள்ளது. கிராமப்புற விவசாயத் துறையில் வேலைவாய்ப்பு 56.7% ஆக உயர்ந்துள்ளது. நடப்பு காலாண்டில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் சராசரியாக 57.9 கோடி பேர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 40.5 கோடி பேர் ஆண்களும், 17.4 கோடி பேர் பெண்களும் ஆவர்.

நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டத்திற்கான நிதி உதவி திட்டத்தின் 2-வது சுற்று நிறைவு

சென்னை – 11 நவம்பர், 2026 நாட்டில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டங்களை விரைவுபடுத்தும் வகையில் ரூ.37,500 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய திட்டத்திற்கு மே 13, 2026 அன்று அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, என்டிபிசி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களுடன் 2-வது சுற்று நிறைவுபெற்றுள்ளதாக நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது. யூரியா, மெத்தனால், டைமெத்தில் ஈதர் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக இந்த விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நாட்டின் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி முக்கியத் தொழில்துறை தயாரிப்புகளுக்கு ஆதரவளிப்பதில் நிலக்கரி எரிவாயுவாக்கலின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

முதல் இரண்டு சுற்றுகளின் வெற்றியைத் தொடர்ந்து, நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டங்களைச் செயல்படுத்த தகுதியான நிறுவனங்கள் விண்ணப்பிக்க ஏதுவாக 3-வது சுற்று இன்று (2026 நவம்பர் 10) தொடங்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஜனவரி 11, 2027 கடைசி நாளாகும். 2030-ம் ஆண்டுக்குள் 100 மில்லியன் டன் நிலக்கரி எரிவாயுவாக்கல் திறனை எட்டுவது என்ற தேசிய இலக்கை அடைய இந்தத் திட்டங்கள் பெரிதும் உதவும். இதன் மூலம் நிலக்கரித் துறையில் தொழில்துறையினரின் பங்களிப்பு அதிகரிப்பதுடன், முதலீடுகளும் ஈர்க்கப்படும்.

கல்வி உதவித்தொகையால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் உயர்கல்வியை தொடரும் இளைஞர்

சென்னை – 11 நவம்பர், 2026 மேற்கு வங்க மாநிலம், டார்ஜிலிங் பகுதியை சேர்ந்தவர் சயான் ராய் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). 32 வயதான இவர், உயர்கல்வியில் சாதிக்க வேண்டும் என விரும்பம் கொண்டிருந்தார். முனைவர் பட்டப்படிப்பு பயிலும் இவர், ஆரம்ப கட்டத்தில் நிதிச்சுமையால் பெரிதும் சிரமப்பட்டார். தங்குமிடத்திற்கான வாடகை, புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் வாங்குவதற்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் சிரமத்திற்கு ஆளானார். இந்நிலையில், பட்டியலின மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், கல்வி உதவித்தொகை வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். இதைத்தொடர்ந்து, 2022 நவம்பர் மாதம் முதல் கல்வி உதவித்தொகையை பெற்று வருகிறார். இதுவரை ரூ.18.41 லட்சம் உதவித்தொகை பெற்றுள்ள சயான் ராய், இதன்மூலம் கல்வி பயில்வதற்கான அனைத்து செலவுகளையும் சிரமின்றி செய்து வருகிறார். பட்டியலின மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டமானது, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டு உயர்கல்வியை தொடர வழிவகை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிலத்தைக் காக்க இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டியது அவசியம்: மத்திய இணையமைச்சர் ராம்நாத் தாக்கூர்

சென்னை – 11 நவம்பர், 2026 மேற்கு வங்க மாநிலம், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டம், சுபாஷ்நகரில் நடைபெற்ற நாடு தழுவிய ‘விளைநிலங்களைக் காப்போம்’ (Khet Bachao Abhiyan) என்ற இயக்கம் தொடர்பான நிகழ்ச்சியில், மத்திய வேளாண் துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் பங்கேற்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் (ஐசிஏஆர்) கீழ் செயல்படும் தேசிய இயற்கை இழை பொறியியல், தொழில்நுட்ப நிறுவனமான ஐசிஏஆர் - நின்ஃபெட் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

அப்போது பேசிய அமைச்சர், மண்ணின் வளத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க இயற்கை விவசாயத்திற்குத் திரும்ப வேண்டும் என்றும், ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இயற்கை உரங்கள், இயற்கை பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகளைக் கடைப்பிடிக்குமாறு விவசாயிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

தேவைக்கேற்ப உரமிடவும், வேளாண் அறிவியல் மையங்கள் வழங்கும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைப் பெறவும் அறிவுறுத்தினார். பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர் முறைகளுடன் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்ற அவர் வலியுறுத்தினார்.

2026 அக்டோபர் 22 முதல் நவம்பர் 30 வரை நடைபெறும் இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம், மண் வளத்தைப் பாதுகாத்து நிலையான விவசாயத்தை உறுதிப்படுத்துவதாகும்.

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — Sr Eye Surgeon — 9444 288784
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salins R — MBBS MD — General Physician — 87780 87742
Dr Praveena E — MBBS MS (ENT) — Sr ENT Surgeon — 9944 100443

மத்திய உள்துறை அமைச்சகம் 6-வது சிறப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது

சென்னை – 11 நவம்பர், 2026 மத்திய உள்துறை அமைச்சகம், 2026 அக்டோபர் 2 முதல் 31-ம் தேதி வரை சிறப்பு இயக்கம் 6 மூலம், தூய்மை, குறைதீர்ப்பு பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலும், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வழிகாட்டுதலின்படியும், ஒருமாத காலமாக அலுவலக மேலாண்மை, நிலுவையில் உள்ள புகார்களுக்கு தீர்வுகாணுதல், பொதுமக்கள் குறைதீர்ப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 6,757 இடங்களில் தூய்மைப்பணி மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில், இது விரிவுபடுத்தப்பட்டு 7,963 இடங்களில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வந்த 147 குறிப்புகள், மாநில அரசுகளிடம் இருந்து வந்த 141 குறிப்புகள், 11,092 பொதுமக்களின் குறைகள், 1666 மேல்முறையீடு ஆகியவற்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2.19 லட்சம் அசல் கோப்புகள், 30,385 மின்னணுக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு தேவையற்ற கோப்புகள் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பயனற்ற பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ.10.17 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும், இதில் மின்னணுக் கழிவுகள் விற்பனை மூலம் மட்டுமே ரூ.2.63 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் எய்ம்ஸ் மருத்துவமனைகளில் ஆறு கோடிக்கும் அதிகமான புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்

சென்னை – 11 நவம்பர், 2026 பிரதமரின் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்கள் (எய்ம்ஸ்) 2021-2022 முதல் 2026-2027-ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் 2026 அக்டோபர் 31 நிலவரப்படி மொத்தம் ஆறு கோடிக்கும் அதிகமான புறநோயாளிப் பிரிவு ஆலோசனைகளை வழங்கியுள்ளன. இச்சாதனை இந்நிறுவனங்களில் வளர்ந்து வரும் செயல்திறனையும் நாடு முழுவதுமுள்ள மக்களுக்கு சிறப்புமிக்க சுகாதார சேவைகள் எளிதில் சென்றடையச் செய்வதில் ஆற்றிய பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.

குறைந்த கட்டணத்தில் நம்பகமான சிறப்பு சுகாதார சேவைகள் கிடைப்பதில் பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை குறைக்க எய்ம்ஸ் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இம்முயற்சி சிறப்பு சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதுடன் நாட்டின் மருத்துவ கல்வி, ஆராய்ச்சி சூழலை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

பிரதமரின் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு கட்டங்களாக அங்கீகரிக்கப்பட்ட 22 புதிய எய்ம்ஸ் நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் முழுமையாக செயல்படுகின்றன. இந்நிறுவனங்கள் புறநோயாளிப் பிரிவு, உள்நோயாளிப் பிரிவு பராமரிப்பு, அவசர சிகிச்சை, விபத்து சிகிச்சைகள், நோய் கண்டறிதல், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு சேவைகளை அளிக்கின்றன.

இந்நிறுவனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை ஆண்டு வாரியாக வெளியிடப்பட்டுள்ள புறநோயாளிப் பிரிவு புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. 2026-2027-ம் நிதியாண்டில் அக்டோபர் வரை இந்த புதிய எய்ம்ஸ் நிறுவனங்களில் 97.41 லட்சம் புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

திருவண்ணாமலை: ஏரியில் மூழ்கி பலியானோரின் குடும்பத்தினருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவி - முதல்வர் விஜய்



திருவண்ணாமலை – 11 நவம்பர், 2026 திருவண்ணாமலை, சமுத்திரம் பெரிய ஏரியில் மூழ்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவியாக ரூ. 3 லட்சத்தை முதல்வர் விஜய் செவ்வாய்க்கிழமை (நவ. 10) அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், ஆணாய்பிறந்தான் கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பெண் குழந்தைகள் காப்பகத்தின் செவிலியர் தேன்மொழி (வயது 22) மற்றும் அக்காப்பகத்தில் தங்கியிருந்த காரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சிறுமிகள் விஜயலட்சுமி (வயது 16), த/பெ. வெங்கடேஷ், அல்லி (வயது 14), த/பெ. வெங்கடேஷ், பூமிகா (வயது 13), த/பெ. வெங்கடேஷ் மற்றும் நெடுங்கம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மாள் (வயது 16), த/பெ. சேகர் ஆகியோர் நேற்று (நவ. 9) காப்பகத்தின் பின்புறமுள்ள சமுத்திரம் கிராம பெரிய ஏரியில் குளிப்பதற்காகச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும். அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும். ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ. 3 லட்சம் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் விஜய் குறிப்பிட்டுள்ளார்.

தில்லியில் யமுனை நதியில் சொகுசுப் படகுச் சுற்றுலா: மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்தார்

தில்லி – 11 நவம்பர், 2026 தில்லி சோனியா விஹாரில், யமுனை நதியின் முதல் சுற்றுலா படகு சேவையை மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், தில்லி முதலமைச்சர் ரேகா குப்தா முன்னிலையில் இன்று (2026 நவம்பர் 10) தொடங்கி வைத்தார்.

சோனியா விஹார் – ஜகத்பூர் இடையே சுமார் 6 கிலோ மீட்டல் தூரம் சென்று திரும்பும் வகையில், 30 பேர் பயணிக்கக்கூடிய மின்சார சொகுசுப் படகு இயக்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்தை ஊக்குவிப்பதுடன், தில்லியின் சுற்றுலாவையும் உள்ளூர் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

யமுனை நதியின் வரலாறு, ஆன்மிகச் சிறப்புகளை விளக்கும் இசை, ஒளி, ஒலி நிகழ்ச்சிகள், இசை நீரூற்று ஆகியவை முக்கியமாக இதில் இடம்பெறுகின்றன. உணவகங்கள், கடைகள், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, சறுக்கு விளையாட்டு, பாறையேற்றம், மிதக்கும் படகுத்துறைகள், கழிப்பறைகள், காத்திருப்பு அறைகள், இணையதள பயணச்சீட்டு முன்பதிவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் அமைச்சர் சர்பானந்த சோனோவால் பேசுகையில், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியாவின் நதிகள் சுற்றுலா வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டார். யமுனை சுற்றுலா படகு சேவை, மக்களை மீண்டும் நதிகளுடன் இணைப்பதுடன், தில்லியில் நதிச் சுற்றுலாவின் புதிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் ரேகா குப்தா பேசுகையில், யமுனை நதி தில்லியின் வரலாறு, கலாசாரம், அடையாளத்தின் முக்கிய அங்கம் என்றார். நதிக்கரையைப் பொதுமக்கள் விரும்பி வந்து செல்லும் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும், உள்கட்டமைப்புகளை உருவாக்கவும் அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தில்லியில் யமுனை நதியில் சொகுசுப் படகுச் சுற்றுலா

சென்னை – 11 நவம்பர், 2026 தில்லியில் யமுனை நதியில் சொகுசுப் படகுச் சுற்றுலா: மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்தார். தில்லி சோனியா விஹாரில், யமுனை நதியின் முதல் சுற்றுலா படகு சேவையை மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், தில்லி முதலமைச்சர் ரேகா குப்தா முன்னிலையில் இன்று (2026 நவம்பர் 10) தொடங்கி வைத்தார். சோனியா விஹார் – ஜகத்பூர் இடையே சுமார் 6 கிலோ மீட்டல் தூரம் சென்று திரும்பும் வகையில், 30 பேர் பயணிக்கக்கூடிய மின்சார சொகுசுப் படகு இயக்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்தை ஊக்குவிப்பதுடன், தில்லியின் சுற்றுலாவையும் உள்ளூர் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

யமுனை நதியின் வரலாறு, ஆன்மிகச் சிறப்புகளை விளக்கும் இசை, ஒளி, ஒலி நிகழ்ச்சிகள், இசை நீரூற்று ஆகியவை முக்கியமாக இதில் இடம்பெறுகின்றன. உணவகங்கள், கடைகள், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, சறுக்கு விளையாட்டு, பாறையேற்றம், மிதக்கும் படகுத்துறைகள், கழிப்பறைகள், காத்திருப்பு அறைகள், இணையதள பயணச்சீட்டு முன்பதிவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பையும், கண்ணியத்தையும் உறுதி செய்யும் நமஸ்தே திட்டம்

புதுச்சேரி – 11 நவம்பர், 2026 புதுச்சேரி நகராட்சியில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக கழிவுநீர்த் தொட்டி, கழிவுநீர்க் குழாய்களைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்த 60 வயதான பட்டியலினத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது), போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாததால் தோல் தொற்று, மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல்நலப் பாதிப்புகளைச் சந்தித்தார். நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் ஒரே வருமானம் ஈட்டுபவரான இவரது மாத வருமானம் ரூ. 12,000 மட்டுமே.

2025- ல் மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் 'நமஸ்தே' திட்டத்தின் கீழ், பாதுகாப்பு உடை, கையுறைகள், காலணிகள், முகக்கவசம், தலைக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களும், பாதுகாப்பான தூய்மைப் பணிக்கான பயிற்சியும் அவருக்கு வழங்கப்பட்டன.

இதனால் பணியின்போது ஏற்படும் ஆபத்துகள் குறைந்து, உடல்நலம் மேம்பட்டது. மருத்துவச் செலவுகளும், உடல்நலக் குறைவால் ஏற்படும் விடுப்புகளும் தவிர்க்கப்பட்டன. இதன் விளைவாக, அவரது மாத வருமானம் ரூ. 12,000- லிருந்து ரூ. 18,000 வரை உயர்ந்தது.

தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பு, உடல்நலம், வாழ்வாதாரம், கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டின் அறிவியல் சாதனைகளையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் எளிய மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க

சென்னை – 11 நவம்பர், 2026 நாட்டின் அறிவியல் சாதனைகளையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் எளிய மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்: மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்.

புவி அமைப்புகள் அறிவியல் குழுமத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது. அறிவியல் சாதனைகளையும் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் எளிய மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் அவர் வலியுறுத்தினார்.

அறிவியல் ஆராய்ச்சிகள் குறித்த தகவல்கள் சாமானிய மக்களுக்கும் எளிதில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மக்களை மையப்படுத்திய அறிவியல் தகவல்தொடர்பு முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய கடல் வள தொழில்நுட்பக் கழகம் (என்ஐஓடி), இந்திய தேசிய கடல்சார் தகவல் சேவைகள் மையம், புவி அறிவியல் ஆய்வு மையம், இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம், தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆய்வு மையம் ஆகிய ஐந்து முக்கியக் கட்டமைப்புகளின் ஓராண்டுச் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. பெருங்கடல் இயக்கம், ஆழ்கடல் ஆய்வுப் பணிகள் குறித்து அமைச்சர் விரிவாக ஆய்வு செய்தார். குறிப்பாக, ஆழ்கடல் மனித ஆய்வுக்கான 'மத்ஸ்யா- 6000' திட்டம் மற்றும் இந்தோ-பிரெஞ்சு கூட்டு முயற்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் ஆய்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. லட்சத்தீவுகளில் குடிநீர்த் திட்டங்கள், கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல் போன்ற உள்நாட்டுத் தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு ஜூலை-செப்டம்பர் 2026 காலாண்டு அறிக்கை வெளியீடு

சென்னை – 11 நவம்பர், 2026 காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு ஜூலை-செப்டம்பர் 2026 காலாண்டு அறிக்கை வெளியீடு: கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரிப்பு.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்தின் கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பின் ஜூலை-செப்டம்பர் 2026 காலாண்டுக்கான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, நாடு முழுவதும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான ஒட்டுமொத்த தொழிலாளர் பங்கேற்பு விகிதம் கடந்த காலாண்டில் 54.6% ஆக இருந்த நிலையில், நடப்பு காலாண்டில் 55.5% ஆக உயர்ந்துள்ளது. கிராமப்புறங்களில் இந்த விகிதம் 58.1% ஆக அதிகரித்துள்ளது. இதேபோல், ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு விகிதம் முந்தைய காலாண்டில் 51.7%- லிருந்து 52.7% ஆக உயர்ந்துள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்பு விகிதம் 55.6% ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் முந்தைய காலாண்டில் 5.4% ஆக இருந்த நிலையில், நடப்பு காலாண்டில் 5.1% ஆகக் குறைந்துள்ளது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 4.8%- லிருந்து 4.3% ஆகக் குறைந்துள்ளது. நகர்ப்புறங்களில் இது 6.8% ஆக உள்ளது. கிராமப்புற விவசாயத் துறையில் வேலைவாய்ப்பு 56.7% ஆக உயர்ந்துள்ளது. நடப்பு காலாண்டில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் சராசரியாக 57.9 கோடி பேர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 40.5 கோடி பேர் ஆண்களும், 17.4 கோடி பேர் பெண்களும் ஆவர்.

மாலிக் ஸ்ட்ரீம்ஸ் டத்தோ மாலிக் வழங்கும்: ஏ.ஆர். ரஹ்மானுடன் இணைந்து பிரம்மாண்டமான ‘வொண்டர்மென்ட் டூர்’ இசை நிகழ்ச்சி!

சென்னை – 11 நவம்பர், 2026 மாலிக் ஸ்ட்ரீம்ஸின் டத்தோ மாலிக், இசை மேதை ஏ.ஆர். ரஹ்மானுடன் முதன்முறையாக இணைந்து நடத்தும் இந்த பிரம்மாண்டமான அரங்க இசை நிகழ்ச்சியில், 90% தமிழ் பாடல்களும், அவரது மிகப்பெரிய வெற்றிப் பாடல்களில் 10% இந்திப் பாடல்களும் இடம்பெறவுள்ளன!

இசை, மெட்டுகள் மற்றும் உணர்வுகளின் அசாதாரண கொண்டாட்டத்திற்குத் தயாராகுங்கள். புகழ்பெற்ற இசையமைப்பாளரும் உலகளாவிய இசை அடையாளமாகத் திகழ்பவருமான ஏ.ஆர். ரஹ்மான், பெரிதும் எதிர்பார்க்கப்படும் தனது ‘வொண்டர்மென்ட் டூர்’ இசை நிகழ்ச்சியை 2027 ஜூன் 12 அன்று கோலாலம்பூரில் உள்ள புகழ்பெற்ற டிஎம் ஸ்டேடியம் நேஷனலில் நடத்தவுள்ளார். மறக்க முடியாத இசை அனுபவத்தை வழங்கவுள்ள இந்த நிகழ்ச்சி, இசை மேதையின் புகழ்பெற்ற இசைப் பயணத்தைக் கொண்டாடும் பிரம்மாண்டமான விழாவாக ஆயிரக்கணக்கான இசை ஆர்வலர்களை ஒன்றிணைக்க உள்ளது.

மாலிக் ஸ்ட்ரீம்ஸின் முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் வகையில், இந்த நிகழ்வு ஏ.ஆர். ரஹ்மானுடன் அந்த நிறுவனம் முதன்முறையாக இணைந்து செயல்படுவதையும் அறிவிக்கிறது. உலகத் தரம் வாய்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்குவதற்கான தனது அர்ப்பணிப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் இது அமைகிறது. ஜன நாயகன் இசை வெளியீட்டு விழாவின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, மாலிக் ஸ்ட்ரீம்ஸ் மீண்டும் ஒரு முக்கியமான பொழுதுபோக்கு நிகழ்வை நடத்தத் தயாராகி வருகிறது.

அசாதாரணமான நேரடி நிகழ்ச்சிகளை வழங்குவதும், பொழுதுபோக்கு உலகின் புகழ்பெற்ற கலைஞர்களை ரசிகர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதும் தனது நோக்கம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

தமிழ் இசை ரசிகர்களிடமிருந்து கிடைத்த அளவற்ற அன்பு மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் ஒரு சிறப்பான இசை அனுபவத்தைத் திட்டமிட்டுள்ளனர். இந்த இசை நிகழ்ச்சியில் 90% ஏ.ஆர். ரஹ்மானின் புகழ்பெற்ற தமிழ் இசையமைப்புகளுக்கும், 10% அவரது மிகப்பெரிய வெற்றிப் பாடல்களான இந்திப் பாடல்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கவனமாகத் தொகுக்கப்பட்ட இந்த இசைப் பட்டியல், தமிழ் ரசிகர்களுக்கு இந்த மாலையை மிகவும் சிறப்பானதாக மாற்றுவதுடன், மொழிகள் மற்றும் தலைமுறைகளைக் கடந்து இந்திய இசைக்கு இசை மேதை ஆற்றியுள்ள அசாதாரண பங்களிப்பையும் கொண்டாடும்.

நம் வாழ்வின் ஓர் அங்கமாக மாறிவிட்ட என்றும் அழியாத மெட்டுகள் முதல் இன்றும் இசைப் பட்டியல்களில் ஆதிக்கம் செலுத்தும் உற்சாகமூட்டும் பாடல்கள் வரை, ஏ.ஆர். ரஹ்மானின் இசைப் பயணத்தில் பல முக்கியமான காலகட்டங்களைக் கடந்து செல்லும் ஓர் இசைப் பயணமாக வொண்டர்மென்ட் டூர் அமையவுள்ளது. ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்த, இசை ரசனைகளை வடிவமைத்த, தலைமுறைகள் கடந்து என்றும் அழியாத நினைவுகளை உருவாக்கிய பாடல்களை மீண்டும் கேட்டு ரசிக்கும் வாய்ப்பை ரசிகர்கள் எதிர்பார்க்கலாம்.

பல தசாப்தங்களாக, தனித்துவமான இசை ஒலி, புதுமையான இசையமைப்புகள் மற்றும் இசையின் மூலம் மொழி, கலாச்சார எல்லைகளைக் கடந்து செல்லும் திறன் ஆகியவற்றால் ஏ.ஆர். ரஹ்மான் இந்தியாவின் மிகவும் கொண்டாடப்படும் இசை அடையாளங்களில்



ஒருவராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். இந்தியத் திரைப்படங்கள் முதல் சர்வதேச இசைக் கூட்டணிகள் வரை பரந்து விரிந்துள்ள அவரது இசைப் படைப்புகள், இசை அனுபவங்களைத் தொடர்ந்து மறுவரையறை செய்து வருகின்றன. அவரது ஒவ்வொரு நேரடி நிகழ்ச்சியும் கலைத்திறன், புதுமை மற்றும் உணர்வுகளின் கொண்டாட்டமாக அமைகிறது.

வொண்டர்மென்ட் டூர் மூலம், இந்த இசைப் பாரம்பரியத்தின் மின்சாரத் தாக்கம் நிறைந்த கொண்டாட்டத்தை கோலாலம்பூர் காணவுள்ளது. மலேசியா மற்றும் அதற்கு அப்பால் உள்ள ரசிகர்கள் அனைவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைய உள்ளனர். இந்த இசை நிகழ்ச்சி ஒரு நேரடி இசை நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், இசைக்கும் அதன் ரசிகர்களுக்கும் இடையிலான காலத்தால் அழியாத தொடர்பைக் கொண்டாடும் ஓர் ஆழமான அனுபவமாகவும் அமையும்.

அதிகாரப்பூர்வ டிக்கெட் விற்பனை மற்றும் நிகழ்ச்சி விவரங்கள்:

பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்த இசை நிகழ்ச்சிக்கான அதிகாரப்பூர்வ டிக்கெட் விற்பனை 2026 டிசம்பர் 4 (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 2 மணிக்கு (மலேசிய நேரப்படி), டிக்கெட்2யூ (www.ticket2u.com.my) இணையதளம் வாயிலாக மட்டுமே தொடங்கும்.

இந்தப் பிரம்மாண்டமான இசைக் கொண்டாட்டத்திற்கான கவுண்ட்டவுன் தொடங்கும் நிலையில், கூடுதல் அறிவிப்புகள், நிகழ்ச்சி தொடர்பான தகவல்கள் மற்றும் பிரத்யேகப் புதுப்பிப்புகள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் அதிகாரப்பூர்வ சமூக ஊடகத் தளங்கள் வாயிலாகத் தொடர்ந்து வெளியிடப்படும்.

ஒரு புகழ்பெற்ற இசையமைப்பாளர், ஒரு பிரம்மாண்டமான மைதானம் மற்றும் தலைமுறைகள் கடந்து ரசிக்கப்பட்ட இசை ஆகியவை ஒன்றிணையும் நிலையில், ஏ.ஆர். ரஹ்மானின் வொண்டர்மென்ட் டூர் பிரம்மாண்டமான நிகழ்ச்சிகள் மற்றும் கோடிக்கணக்கான உணர்வுகள் நிறைந்த ஓர் மாலையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு இசை மேதை. ஒரு மைதானம். தலைமுறைகளைக் கடந்த இசை. கோடிக்கணக்கான உணர்வுகள்.

கோலாலம்பூர், இதுவரை இல்லாத வகையில் ஏ.ஆர். ரஹ்மானின் இசை மாயாஜாலம், மெட்டுகள் மற்றும் வியப்பை அனுபவிக்கத் தயாராகுங்கள்!

நிகழ்ச்சி: ஏ.ஆர். ரஹ்மான் வொண்டர்மென்ட் டூர்

தேதி: 2027 ஜூன் 12

இடம்: டிஎம் ஸ்டேடியம் நேஷனல், கோலாலம்பூர்

டிக்கெட் விற்பனை: 2026 டிசம்பர் 4 | பிற்பகல் 2 மணி (மலேசிய நேரப்படி)

டிக்கெட்டுகள்: www.ticket2u.com.my

சிறப்பு இயக்கம் 6-ன் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தித் துறை வெற்றிகரமாக தூய்மைப்பணிகளை மேற்கொண்டது

சென்னை – 11 நவம்பர், 2026 சிறப்பு இயக்கம் 6-ன் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தி துறை தூய்மைப்பணி உள்ளிட்டவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டது.

45,000 நேரடி கோப்புகளை ஆய்வு செய்து 43,952 கோப்புகளை நீக்கியது. 55,000 மின் கோப்புகளை ஆய்வு செய்து 51,230 மின் கோப்புகளை நீக்கியது. பழையப்பொருட்களையும், பயன்படுத்தப்படாத பொருட்களையும் அகற்றியதன் மூலம் 19.35 லட்சம் சதுர அடி அளவிலான பகுதியை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது. பழையப்பொருட்களையும், மின் கழிவுகளையும் அகற்றியதன் மூலம் ரூ.22.19 கோடி வருவாய் ஈட்டியது. 136 பொது மக்களின் குறைகளுக்கும், 17 மேல் முறையீடுகளுக்கும் தீர்வு காணப்பட்டது. மிக முக்கிய நபர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 11 பரிந்துரைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

நிலத்தைக் காக்க இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டியது அவசியம்: மத்திய இணையமைச்சர் ராம்நாத் தாக்கூர்

சென்னை – 11 நவம்பர், 2026 மேற்கு வங்க மாநிலம், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டம், சுபாஷ்நகரில் நடைபெற்ற நாடு தழுவிய ‘விளைநிலங்களைக் காப்போம்’ (Khet Bachao Abhiyan) என்ற இயக்கம் தொடர்பான நிகழ்ச்சியில், மத்திய வேளாண் துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் பங்கேற்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் (ஐசிஏஆர்) கீழ் செயல்படும் தேசிய இயற்கை இழை பொறியியல், தொழில்நுட்ப நிறுவனமான ஐசிஏஆர் - நின்ஃபெட் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

அப்போது பேசிய அமைச்சர், மண்ணின் வளத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க இயற்கை விவசாயத்திற்குத் திரும்ப வேண்டும் என்றும், ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இயற்கை உரங்கள், இயற்கை பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகளைக் கடைப்பிடிக்குமாறு விவசாயிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

தேவைக்கேற்ப உரமிடவும், வேளாண் அறிவியல் மையங்கள் வழங்கும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைப் பெறவும் அறிவுறுத்தினார். பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர் முறைகளுடன் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்ற அவர் வலியுறுத்தினார்.

2026 அக்டோபர் 22 முதல் நவம்பர் 30 வரை நடைபெறும் இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம், மண் வளத்தைப் பாதுகாத்து நிலையான விவசாயத்தை உறுதிப்படுத்துவதாகும்.

மத்திய உள்துறை அமைச்சகம் 6-வது சிறப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது

சென்னை – 11 நவம்பர், 2026 மத்திய உள்துறை அமைச்சகம், 2026 அக்டோபர் 2 முதல் 31-ம் தேதி வரை சிறப்பு இயக்கம் 6 மூலம், தூய்மை, குறைதீர்ப்பு பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலும், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வழிகாட்டுதலின்படியும், ஒருமாத காலமாக அலுவலக மேலாண்மை, நிலுவையில் உள்ள புகார்களுக்கு தீர்வுகாணுதல், பொதுமக்கள் குறைதீர்ப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 6,757 இடங்களில் தூய்மைப்பணி மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில், இது விரிவுபடுத்தப்பட்டு 7,963 இடங்களில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வந்த 147 குறிப்புகள், மாநில அரசுகளிடம் இருந்து வந்த 141 குறிப்புகள், 11,092 பொதுமக்களின் குறைகள், 1666 மேல்முறையீடு ஆகியவற்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2.19 லட்சம் அசல் கோப்புகள், 30,385 மின்னணுக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு தேவையற்ற கோப்புகள் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பயனற்ற பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ. 10.17 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும், இதில் மின்னணுக் கழிவுகள் விற்பனை மூலம் மட்டுமே ரூ. 2.63 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவச் சாதனங்களுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டம் 2035–36 வரை நீட்டிப்பு

சென்னை – 11 நவம்பர், 2026 மருத்துவச் சாதனங்களுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டம் 2035–36 வரை நீட்டிப்பு: புதிய விண்ணப்பங்கள் வரவேற்பு.

மருத்துவச் சாதனங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இத்துறையில் செயல்படுத்தப்படும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டம் 2035–36 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 2,700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இணையதளம் 10 நாட்களில் செயல்பாட்டுக்கு வரும்.

2020–21-ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் எக்ஸ்ரே கருவிகள், எம்ஆர்ஐ, சிடி ஸ்கேனர்கள், இதய, எலும்பு உள்வைப்புகள் உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்ட உயர்தர மருத்துவச் சாதனங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் உற்பத்தி மதிப்பு ரூ. 16,000 கோடியைத் தாண்டியுள்ளது.

புதிய விதிகளின்படி, உற்பத்திக் கட்டமைப்பை உருவாக்க 3 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்படும். முக்கிய சாதனங்கள் தயாரிப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஊக்கத்தொகை பெறுவதற்கான குறைந்தபட்ச விற்பனை இலக்கு நீக்கப்பட்டுள்ளதுடன், குறைந்தபட்ச முதலீட்டுத் தொகையும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், விண்ணப்ப நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. ஒன்றுக்கும் மேற்பட்ட பிரிவுகளில் எத்தனை விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்.

இதன் மூலம் முதலீடு, வேலைவாய்ப்பு, உள்நாட்டு உற்பத்தி ஆகியவை அதிகரிப்பதுடன், மருத்துவச் சாதனங்களின் விலை குறையும். இதன் மூலம் இத்துறையில் இந்தியாவின் உலகளாவிய போட்டித்திறனை மேம்படும்.

தூய்மைக்கான சிறப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது ராணுவ விவகாரங்கள் துறை

சென்னை – 11 நவம்பர், 2026 பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ராணுவ விவகாரங்கள் துறை, 6-வது சிறப்புத் தூய்மை இயக்கத்தை 2026 அக்டோபர் 02 முதல் 31-ம் தேதி வரை நடத்தியது.

இதில், 8,507 இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மின்னணுக் கழிவுகள் உள்ளிட்ட பழைய பொருட்களை விற்றதன் மூலம் ரூ. 89.68 கோடி வருவாய் கிடைத்தது.

மேலும், 5,28,443 ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு, 16,837 தேவையற்ற கோப்புகள் அகற்றப்பட்டன. இதன்மூலம் 3,53,291 சதுர அடி இடம் விடுவிக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. பொதுமக்களின் 2,905 புகார்களும், 466 மேல்முறையீடுகளும் தீர்க்கப்பட்டன.

தாம்பரம் விமானப்படைத் தளம், 60 முதல் 80 ஆண்டுகள் பழமையான 9 கிணறுகளைச் சீரமைத்து, தினமும் ஒரு லட்சம் லிட்டர் கூடுதல் தண்ணீர் கிடைக்க வழிவகுத்தது. மேலும், மும்பை ஐஐடி உதவியுடன் ஐஎன்எஸ் சிவாஜி கப்பற்படைத் தளம், உயிரி எரிபொருள் மூலம் நீராவியில் உணவு சமைக்கும் கருவியை நிறுவியது.

ஒளிப்பதிவாளர் விஜய் ஆம்ஸ்ட்ராங் இயக்குநராக அறிமுகமாகும் 'வன மடி'



சென்னை – 11 நவம்பர், 2026 "2D திரையிலிருந்து 3D இயற்கைக்குத் திரும்புங்கள்!" – சுற்றுச்சூழல் விழிப்புணர்வோடு உருவாகும் 'வன மடி'!

35 சர்வதேச திரைப்பட விழாக்கள்... 4 விருதுகள்! – சர்வதேச அளவில் கவனம் ஈர்க்கும் 'வன மடி'!

சென்டர் சீட் சினிமாஸ் (Center Seat Cinemas) விஜயராகவன் தயாரிப்பில், ஞானம் சுப்பரமணியனின் நிர்வாக மேலாண்மையில் உருவாகும் படம் 'வன மடி'.

'மாத்தி யோசி', 'தொட்டால் தொடரும்', 'அழகு குட்டி செல்லம்', 'புகைப்படம்' உள்ளிட்ட அழகிய திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய விஜய் ஆம்ஸ்ட்ராங் இந்தப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.

கால மாற்றங்கள் நம்மையும், நம் சந்ததிகளையும் ஒரு வலிமையான சுழிக்குள் இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறது.

இயல்பான மனிதர்கள் தங்களுக்குள் அன்பும், தேடுதலும் இயந்திரகதிக்குள் ஒளிந்துகொண்டுவிட்டன என்பதைத் தனது எளிய மொழியில் விஜய் ஆம்ஸ்ட்ராங் சொல்லியிருப்பதே 'வன மடி' படத்தின் கரு.

முற்றிலும் புதியவர்கள் நடித்துள்ள 'வன மடி' படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியுள்ளதுடன் ஒளிப்பதிவும் செய்திருக்கிறார் விஜய் ஆம்ஸ்ட்ராங்.

அமெரிக்காவில் வசிக்கும் ராலே ராஜன் இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

ராலே ராஜன் அமெரிக்காவில் நமது தமிழ்ச் செய்யுள்கள் பலவற்றை இசை வடிவமாக மாற்றும் வேலையைச் செய்து வருகிறார்.

இவரது இசையில் வன மடி படத்தில் மால்குடி சுபா ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

அதேபோல சூப்பர் சிங்கர் ஜூனியர் வெற்றியாளர் கிரிஷாங், சூர்யா மற்றும் மமிதா பைஜு நடிப்பில் உருவாகியுள்ள விஸ்வநாத் அண்ட் சன்ஸ் (Vishwanath and Sons) திரைப்படத்தின் உணர்ச்சிப்பூர்வமான "ஆரிராரோ ஆரிரோ" பாடலைப் பாடியவர்... இந்தப் படத்திலும் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார்.

பாடல்களை ரமேஷ் வைத்யா எழுதியுள்ளார். 'அழகு குட்டி செல்லம்', 'லால் சலாம்' படங்களில் பணியாற்றிய பிரவீன் பாஸ்கர் இந்தப் படத்தின் படத்தொகுப்பைக் கவனிக்கிறார்.

படம் முழுமையாகத் தயாராகியுள்ள நிலையில், கிட்டத்தட்ட 35 சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் 7 சர்வதேச திரைப்பட விழாக்களில் தேர்வாகி, அவற்றில் 4 திரைப்பட விழாக்களில் வெவ்வேறு பிரிவுகளில் விருதுகளையும் வென்றுள்ளது.

மீதமிருப்பவை விருதுகளின் அறிவிப்புகளுக்காகக் காத்திருக்கின்றன. அடுத்ததாக கோவாவில் நவம்பர் மாதம் நடக்க இருக்கும் இந்தியன் பனோரமாவிலும் இந்தப் படம் கலந்து கொள்ள உள்ளது.

இயக்குநர் விஜய் ஆம்ஸ்ட்ராங் படம் பற்றிக் கூறும்போது, "இப்படம் இயற்கை சம்பந்தப்பட்டது. தாய் மடி என்பது போல வன மடி என்ற பெயரை வைத்துள்ளோம். இந்தப் படம் எதிர்காலத் தலைமுறைக்கான படம் மட்டுமல்ல, குறிப்பாக அனைத்துப் பெற்றோர்களுக்குமான படமும் கூட.

திரைப்பட விழாக்களில் இப்படம் முக்கிய கவனம் பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்தப் படத்தை 6 முறை தேசிய விருது பெற்ற எடிட்டர் B. லெனின் பார்த்தார். படம் அவருக்கு ரொம்பவே பிடித்துவிட, அவர் தன்னுடைய தந்தை, இயக்குநர் பீம்சிங்கின் புத்தா பிக்சர்ஸ் என்கிற பேனரில் இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய இருக்கிறார். அதுவே இப்படத்திற்குக் கிடைத்த சிறந்த விருதாகக் கருதுகிறேன்.

'வன மடி' விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது" என்றார் இயக்குநர், ஒளிப்பதிவாளர் விஜய் ஆம்ஸ்ட்ராங்.

நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டத்திற்கான நிதி உதவி திட்டத்தின் 2-வது சுற்று நிறைவு

சென்னை – 11 நவம்பர், 2026 நாட்டில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டங்களை விரைவுபடுத்தும் வகையில் ரூ. 37,500 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய திட்டத்திற்கு மே 13, 2026 அன்று அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, என்டிபிசி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களுடன் 2- வது சுற்று நிறைவுபெற்றுள்ளதாக நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது. யூரியா, மெத்தனால், டைமெத்தில் ஈதர் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக இந்த விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நாட்டின் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி முக்கியத் தொழில்துறை தயாரிப்புகளுக்கு ஆதரவளிப்பதில் நிலக்கரி எரிவாயுவாக்கலின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

முதல் இரண்டு சுற்றுகளின் வெற்றியைத் தொடர்ந்து, நிலக்கரி எரிவாயுவாக்கல் திட்டங்களைச் செயல்படுத்த தகுதியான நிறுவனங்கள் விண்ணப்பிக்க ஏதுவாக 3- வது சுற்று இன்று (2026 நவம்பர் 10) தொடங்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஜனவரி 11, 2027 கடைசி நாளாகும். 2030- ம் ஆண்டுக்குள் 100 மில்லியன் டன் நிலக்கரி எரிவாயுவாக்கல் திறனை எட்டுவது என்ற தேசிய இலக்கை அடைய இந்தத் திட்டங்கள் பெரிதும் உதவும். இதன் மூலம் நிலக்கரித் துறையில் தொழில்துறையினரின் பங்களிப்பு அதிகரிப்பதுடன், முதலீடுகளும் ஈர்க்கப்படும்.

தில்லியில் நடைபெறும் ஷில்ப் சமகம் கைவினைக் கண்காட்சியில் ஒட்டுமொத்த விற்பனை சுமார் ரூ.

சென்னை – 11 நவம்பர், 2026 தில்லியில் நடைபெறும் ஷில்ப் சமகம் கைவினைக் கண்காட்சியில் ஒட்டுமொத்த விற்பனை சுமார் ரூ. 64.50 லட்சமாக பதிவு.

இந்திய அரசின் சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தால், தலைநகர் தில்லியில் நடைபெற்றுவரும் ' ஷில்ப் சமாகம் மேளா 2026' கைவினைக் கண்காட்சி, இந்தியாவின் வளமான பாரம்பரியக் கைவினைத்திறன், கலாச்சார மரபு, தொழில்முனைவு உணர்வை வெளிப்படுத்தும் ஒரு துடிப்பான தளமாக உருவெடுத்துள்ளது.

நவம்பர் 15- ம் தேதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில், பட்டியலின, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், துப்புரவுப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் முதலிய பிரிவுகளைச் சேர்ந்த கைவினைஞர்களும், பயனாளிகளும், தாங்கள் தயாரித்த பொருட்களைப் பரந்த அளவிலான மக்களிடம் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

நவம்பர் 1 முதல் 9, வரையிலான காலத்தில், கண்காட்சியின் ஒட்டுமொத்த விற்பனை ரூ. 64.52 லட்சமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விற்பனை புள்ளிவிவரங்கள், கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட தயாரிப்புகளுக்குச் சந்தையில் கிடைத்துள்ள சாதகமான வரவேற்பையும், இதில் பங்கேற்ற கைவினைக் கலைஞர்களுக்குச் சந்தையில் அதிகரித்து வரும் வாய்ப்புகளையும் பிரதிபலிக்கின்றன.

இந்திய அஞ்சல்துறையும், இண்டிகோ விமான நிறுவனமும் இணைந்து பயணிகள் அஞ்சல் அட்டை எழுதும் பழக்கத்தை ஊக்குவித்தது

சென்னை – 11 நவம்பர், 2026 மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்தின் அஞ்சல்துறை இண்டிகோ நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் விமானத்தில் பயணிக்கும்போது அஞ்சல் அட்டை எழுதும் டிஜிட்டல் டிடாக்ஸ் 2.0-ன் இரண்டாம் பதிப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தது. பண்டிகை காலத்தையொட்டி, தங்கள் கையால் எழுதப்பட்ட அஞ்சல் அட்டை மூலம் தங்களுடைய அன்புக்குரியவர்களுக்கு மனமார்ந்த தீபாவளி வாழ்த்துகளை கூறுவதற்கான தனித்துவமான வாய்ப்பு பயணிகளுக்குக் கிடைத்தது.

சண்டிகர், ராஞ்சி, பாக்டோக்ரா, தில்லி, மும்பை, கோவா, புனே, அகமதாபாத், கொல்கத்தா, வாரணாசி உள்ளிட்ட 11 இடங்களில் 15 இண்டிகோ விமானங்களில் இந்த இயக்கம் நடத்தப்பட்டது. பயணிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் டிடாக்ஸ் தொகுப்பு வழங்கப்பட்டது. அதில் அஞ்சல் அட்டைகள், வாழ்த்து அட்டைகள், பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒட்டும் தாள்கள் மூலம் பயணிகளே உருவாக்க கூடிய அஞ்சல் அட்டைகள் இருந்தன. இது அவர்களை திரைகளை காண்பதிலிருந்து சிறிது நேரம் விலகி சுயமாக பண்டிகை செய்திகளை எழுத ஊக்குவித்தது.

இந்த முன்முயற்சியை மனமகிழ்ந்து வரவேற்ற பயணிகள் இந்த இயக்கத்தின் நினைவுகூரத்தக்க அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

கல்வி உதவித்தொகையால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் உயர்கல்வியை தொடரும் இளைஞர்

சென்னை – 11 நவம்பர், 2026 மேற்கு வங்க மாநிலம், டார்ஜலிங் பகுதியை சேர்ந்தவர் சயான் ராய் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) . 32 வயதான இவர், உயர்கல்வியில் சாதிக்க வேண்டும் என விரும்பம் கொண்டிருந்தார். முனைவர் பட்டப்படிப்பு பயிலும் இவர், ஆரம்ப கட்டத்தில் நிதிச்சுமையால் பெரிதும் சிரமப்பட்டார். தங்குமிடத்திற்கான வாடகை, புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் வாங்குவதற்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் சிரமத்திற்கு ஆளானார். இந்நிலையில், பட்டியலின மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், கல்வி உதவித்தொகை வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். இதைத்தொடர்ந்து, 2022 நவம்பர் மாதம் முதல் கல்வி உதவித்தொகையை பெற்று வருகிறார். இதுவரை ரூ. 18.41 லட்சம் உதவித்தொகை பெற்றுள்ள சயான் ராய், இதன்மூலம் கல்வி பயில்வதற்கான அனைத்து செலவுகளையும் சிரமின்றி செய்து வருகிறார். பட்டியலின மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டமானது, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டு உயர்கல்வியை தொடர வழிவகை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

